வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.03.2022 சனிக்கிழமை | இதழ் : 104 | பக்கங்கள் : 16

# கந்தரோடையில் புதிய விகாரை; பிரதமர் அடிக்கல் நாட்டுவார்?

## சுமந்திரன் எம். பி. நேற்று களஆய்வு

*யாழ்ப்பாணம், மார்ச் 19*

இன்று சனிக்கிழமை யாழ்ப்பா ணத்துக்கு வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களின் புராதன இராசதானியாகக் கூறப்படும் இன் றைய கந்தரோடையில் பௌத்த விகாரை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டி வைக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, அங்கு புதிதாக புத்தர் சிலை ஒன்று அமைக்கப்படு கின்றது. இந்த விடயம் தொடர்பில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்தார் என்று அறிய வருகின்றது.

இற்றைக்கு 2500 வருடங் களுக்கு முற்பட்ட இராச்சிய

15

# பொருளாதார நிலையம் திறக்க இன்று யாழ். வருகிறார் மஹிந்த



*யாழ்ப்பாணம், மார்ச் 19*

பொருளாதார மத்திய நிலையம் ஒன்றைத் திறந்து வைப்பதற்காகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார் என தெரிய வருகிறது.

தென்மராட்சி - மட்டு வில் வண்ணாத்தி பாலத்துக்கு அருகில் உள்ள பொருளாதார

15

# மகனே கூலிக்கு ஆள் வைத்து தந்தையை வெட்டிக்கொன்றார்!

## மட்டக்களப்பில் கொடூரம்

*கரடியனாறு, மார்ச் 19*

குடும்பத் தகராறால் கூலிக்கு ஆள் வைத்து தந்தையையே வெட்டிக் கொலை செய்த மகனை கரடியனாறு பொலி ஸார் கைது செய்துள்ள னர் என்று மட்டக்க ளப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பி. பண்டார தெரிவித் தார்.

கரடியனாறு - ஈர லக்குளம் பகுதியில் வய லுக்கு காவலுக்கு சென்ற விவசாயி ஒருவர் கடந்த

11

# உக்ரைனுக்காக இலங்கை குரல் கொடுக்க வேண்டும்!

## அமெரிக்கா, மேற்கு நாடுகள் கூட்டாக கோரிக்கை!



*கொழும்பு, மார்ச் 19*

உக்ரைனுக்கு ஆதரவாக இலங்கை குரல்கொடுக்க வேண்டும் என்று அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் கூட்டா கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

15

# திடீர் காற்று, மழையால் கிளிநொச்சியில் பாதிப்பு



*கிளிநொச்சி, மார்ச் 19*

கிளிநொச்சியில் திடீரென பலத்த காற்றுடன் பெய்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட் டுள்ளது.

கடும் காற்று மற்றும் மழையால் செல்வாநகர், கிருஷ் ணாபுரம் ஆகிய பகுதிகளில் வீடுகள் சேதமடைந்துள் ளன.

நேற்று மாலை வரையான தகவல்களின்படி செல்வா நகரில் 3 வீடுகளும், கிருஷ்ணாபுரத்தில் 5 வீடுகளும் பாதிப்படைந்துள்ளன என்று

15

# வயிற்றோட்டத்தால் குழந்தை மரணம்!

*நெடுந்தீவு, மார்ச் 19*

காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்ட 9 மாத பெண் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரி ழந்தது.

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமல்ராஜ் டென்ஜான்சிகா என்ற 9 மாத பெண் குழந்தையே இவ்வாறு உயிரி ழந்தது.

15

# மருத்துவ உபரணங்களும் நேற்றுமுதல் விலையுயர்வு

*கொழும்பு, மார்ச் 19*

மருத்துவ கருவிகளும் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 29வீதத்தால் விலையுயர்ந்தன.

கண் வில்லைகள், ஒட்சிமீற்றர்கள், குளுக்கோ மீற்றர்கள், ஸ்டென்ட்கள் ஆகிய வையை இவ்வாறு அதி கரிக்கப்படவுள்ளன.

இதய சத்திரசிகிச் சைக்கு பயன்படுத்தப் படும் ஸ்டென்ட் ஒன்றின் புதிய விலை சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் எனத் தெரிய வருகின்றது.

எனினும், 38 வகையான கண் வில்லைகளின்

15

# மருந்துகள், எரிபொருள், எரிவாயு இல்லை! மருத்துவமனைகள் மூடப்படும் நிலையில்!!

## அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியம் எச்சரிக்கை

*கொழும்பு, மார்ச் 19*

அரசாங்க மருத்துவ மனை மருத்துவர்கள் உள்ளிட்ட ஊழியர்க ளுக்கு எரிபொருள், எரி வாயு மற்றும் அத்தியா வசிய மருந்துகளை அரசாங்கம் வழங்கா



விட்டால் இன்னும் ஒரு வாரத்தில் அனைத்து அரச மருத்துவம னைகளும் மூடப்படும் நிலை உருவாகும் என அரச வைத்திய அதிகாரி கள் ஒன்றியத்தின் தலை வர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரி வித்தார்.

மருத்துவ

15



ஜே.வி.பியின் இளைஞரணியினர் நேற்று ஜனாதி பதி செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது. (தொடர்புடைய செய்தி பக்கம் 2இல்)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அந்த மன்னருக்கு தனது அமைச்சர் மீது அதிக அபிமானம் இருந்தது.

அதனால் அவரை எப்போதுமே தன்னுடன் வைத்துக் கொண்டு அவருடன் உரையாடி மகிழ்ந்தார்.

மன்னர் உணவருந்தும் சமயத்திலும்கூட அமைச்சரையும் தம்முடன் அமர்ந்து உணவருந்தச் சொல்வார்.

ஒரு நாள் மன்னரும் அமைச்சரும் வழக்கம்போல அருகருகே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தனர். அன்று கத்தரிக்காய் கறி சமைக்கப்பட்டிருந்தது.

மன்னருக்கு அன்று அதிகமான பசியாக இருந்ததால் கத்தரிக்காய் கறி மிகவும் சுவையாக இருந்தது. விரும்பிச் சாப்பிட்டார்.

சாப்பாட்டின் இடையே மன்னர், அமைச்சரை நோக்கி, “அமைச்சரே, உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் கத்தரிக்காய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது, நீர் என்ன நினைக்கிறீர்?” என்று கேட்டார்.

“சந்தேகமே வேண்டாம். கத்தரிக்காய்க்கு நிகராக வேறு காயைச் சொல்லவே முடியாது” என்று அமைச்சரும் ஆமாம் போட்டார்.

மன்னர் உடனே சமையற்காரனை அழைத்து “இனி, சமையலில் கத்தரிக்காய் கறிக்குத்தான் முதலிடம் தர வேண்டும். அன்றாடம் ஏதாவது ஓர் உருவத்தில் கத்தரிக்காயை உணவுடன் சேர்த்துவிடு” என்று உத்தரவிட்டார்.

நாள் தவறாமல் உணவில் கத்தரிக்காய் சேர்த்துக் கொண்டதால் மன்னருக்கு அந்த காயின் மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டது.

அன்றைய சாப்பாட்டின்போதும் கத்தரிக்காய் பரிமாறப்பட்டது. மன்னர் அமைச்சரை நோக்கி, “உலகத்திலேயே மிகவும் மோசமான காய் கத்தரிக்காய் என்றுதான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?” என்று கேட்டார்.

“ஆமாம் மன்னர் அவர்களே, எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நான் அறிந்த மட்டில் இவ்வளவு மோசமான சுவையே இல்லாத கத்தரிக்காயைப் போன்ற காயைக் கண்டதே இல்லை” என்றார் அமைச்சர்.

“என்ன அமைச்சரே, பத்து நாட்களுக்கு முன்னால் நான் கேட்டபோது உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் என்று சொன்னீர். இப்பொழுது தலைகீழாக மாற்றிப் பேசுகிறீரே” என்று மன்னர் கேட்டார்.

அமைச்சர் சிரித்துக் கொண்டே, “மன்னர் அவர்களே! என்ன செய்வது? நான் தங்களிடம் அல்லவா வேலை பார்க்கிறேன். கத்தரிக்காயிடமல்லவே” என்றார்.

ஒருநாள் மாலை நண்பர்களுடன் இருந்தபோது குறுந்தகவல் செய்தி ஒன்று வந்தது. நாளை யாழ்.செயலகத்தை ஈ.பி.டி.பியினர் முற்றுகையிட்டுப் போராட்டம் நடாத்தவிருக்கின்றனர் என்றது அந்தச் செய்தி.

கடந்த வரவு-செலவுத்திட்டத்தின்போது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் நாற்பது லட்சம் ரூபா ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்றும், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரே அதனை கையாள்வதாகவும் கடந்த சில நாட்களாக பலரும் கண்டனம் தெரிவித்து வந்தனர். யாழ்ப்பாண அரச அதிபர் இதுவிடயத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவருக்கு சார்பாக நடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையிலேயே ஈ.பி.டி.பி. இந்த போராட்டத்தை நடத்தியது.

ஈ.பி.டி.பி, இன்றைய அரசில் பலம்பொருந்திய பங்காளிகளில் ஒன்று. அதன் தலைவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர். இன்றைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களில் மிகவும் சீனியர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, அவர் அரசன் என்றால், நான் சிற்றரசன் என்று மார்தட்டி நின்ற தலைவர் டக்ளஸ்.

இன்றும் மஹிந்தரின் செல்லப்பிள்ளை. ஆனால் அவர் நேற்று அரசியலுக்கு வந்த ஒரு ‘பொடியனுக்கு’ எதிராக போராட்டம் செய்யவேண்டிய நிலையிலா இருக்கிறார்?

இந்தப் போராட்டம் எதைச் சொல்லியிருக்கின்றது? டக்ளஸ் என்ற அந்த மலையைவிட, இவர் பெரியவர் என்பதைத்தானே என்று அந்த குறுந்தகவல் வந்தபோது அருகே இருந்த நண்பரிடம் கேட்டேன்.

அவர் டக்ளஸின் தனிப்பட்ட நண்பர். அப்போது அவர் சொன்னார், ‘எல்லாம் அவரைச் சுற்றி இருப்பவர்களின் ஆலோசனை. அவரும் என்ன செய்வது. அவருடன் இருப்பவர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றத்தானே வேண்டும்’ என்று.

அப்போது, அந்த அமைச்சரின் பதில்தான் ஞாபகத்திற்கு வந்தது!

**- ஊர்க்குருவி**

# நெருக்கடியை முன்பே அறிந்திருந்த ஜனாதிபதி நாணய நிதியத்திடம் உதவி கோர தாமதம் ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதி நாட்டில் நிலவும் நெருக்கடி குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தார் என்றால், ஏன் சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தைகளை நடத்த தாமதமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா, கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனை திரும்பச் செலுத்தும் முறைமையை உருவாக்க சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தை நடத்துவது என ஜனாதிபதி எடுத்த முடிவை பாராட்டினாலும் தற்போது எடுத்த இந்த முடிவை முன்கூட்டியே எடுத்திருந்தால், மக்கள் இவ்வாறு கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டிருக்காது. நெருக்கடி ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து இருந்ததாக ஜனாதிபதி கூறுகிறார்.

இதன் காரணமாக வாகன இறக்குமதியை நிறுத்தி, அந்நிய செலாவணியை சேமிக்க நடவடிக்கை எடுத்ததாக அவர் கூறினார். நெருக்கடி ஏற்படும் என்பது ஜனாதிபதிக்கு முன்கூட்டியே தெரியும் என்றால், அரசியல் பிரபலத்தை பெறுவதற்காக பெரியளவில் வரிகளை குறைத்து வருடம் ஒன்றுக்கு கிடைக்கவேண்டிய 600 பில்லியன் வருமானத்தை ஏன் இல்லாமல் ஆக்கினார்?.

இதன் உலகில் குறைந்த அரச வருமானத்தை ஈட்டும் இலங்கை போன்ற நாட்டின் வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. அதேபோல் ரூபாயை மிதக்கவிட்டால், ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும் எனவும் அதன் மூலம் சந்தையில் ஏற்படும் பற்றாக்குறை குறைக்க முடியும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி கூறுவது போல், நெருக்கடியை முன்கூட்டியே அறிந்திருந்தார் என்றால், ரூபாயை செயற்கையாக கட்டுப்படுத்தும் ஆலோசனையை ஏன் வழங்கினார்?.

ஆரம்பத்தில் சுமார் நான்கு பில்லியன் டொலர் வருமானத்தை நாடு இழந்தது என்பதை ஜனாதிபதி அறிவாரா?. ரூபாயின் பெறுமதியை பாதுகாக்க சுமார் 1.5 பில்லியன் டொலர் வரை இழக்க நேரிட்டது. அத்துடன் ரூபாயின் பெறுமதியை செயற்கையாக கட்டுப்படுத்தியதால், நாடு 2.5 பில்லியன் அந்நிய செலாவணி வருமானத்தை இழந்தது.

இதன் காரணமாக அந்நிய செலாவணி நெருக்கடி நீடித்துச் சென்றது. நாட்டுக்காக இந்த சந்தர்ப்பத்தில் மின்சாரத்தையும் எரிபொருளையும் சிக்கனமாக பயன்படுத்துமாறு நீங்கள் கேட்கின்றீர்கள்.

மக்கள் சிறிதளவு எரிபொருளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் உள்ளனர். அத்துடன் அதிகமான விலையில் எரிபொருளை கொள்வனவு செய்து, அதனை மக்கள் வீணாக பயன்படுத்துவார்கள் என்று எண்ணுவது தவறு-என்றார். (அ)

# சோசலிச இளைஞர் முன்னணி கொழும்பில் நேற்று போராட்டம்




கொழும்பு, மார்ச் 19

நாட்டின் எரிபொருள் வரிசையை முடிவுக்கு கொண்டு வருவோம் எனும் தொனிப்பொருளில் சோசலிச இளைஞர் முன்னணி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

சோசலிச இளைஞர் முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் கொழும்பில் நடத்தப்பட்டது.

நாட்டின் எரிபொருள் வரிசையை முடிவுக்கு கொண்டு வருவோம், இந்தியாவுக்கு வழங்கப்பட்ட எண்ணெய்க் குதங்கள் மற்றும் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்ட யுகதனவி ஆகியவற்றை மீளப் பெறுவோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக கொழும்பின் பல பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (அ)

# மதுபானச்சாலைக்கு அனுமதி வழங்காதீர்!

## பருத்தித்துறை பிரதேச செயலருக்கு மகஜர்!



யாழ்ப்பாணம், மார்ச் 19

பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வந்த மதுபானசாலை புதிய இடம் ஒன்றுக்கு மாற்றப்படவுள்ளதாகவும், எனவே அந்தச் சூழலில் இரண்டு ஆலயம், தபாலகம், பாடசாலை உட்பட மக்கள் குடியேற்றங்கள் உள்ளதால் அதற்கு அனுமதி வழங்குவதை தடை செய்யுமாறு கோரி குறித்த பகுதியில் சுமார் நூறு மீற்றர் சூழலில் உள்ள வைரவர் மற்றும் முருகன் ஆலயங்கள் ஆகியவற்றின் பரிபாலன சபையினர் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

பருத்தித்துறை நகர் பகுதியில் சிவன் ஆலயத்துக்கு முன்பாக இவ்வளவு காலமும் இயங்கி வந்த குறித்த மதுபானச்சாலையை தொடர்ந்தும் அங்கு இயங்குவதற்கு பருத்தித்துறை நகரசபையால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிறிதொரு இடத்துக்கு அது மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனை தடை செய்யக் கோரியே பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
19.03.2022சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சீனாவும் தமிழர் பிரச்னையும்?

சீனாவின் ஆதிக்கத்தை நாங்கள் எதிர்க்கின்றோம் - சீனா, வடக்கு கிழக்குக்குள் வருவதை நாங்கள் விரும்பவில்லையென்று கூட்டமைப்பின் வெளிவிவகாரங்களை கையாளும் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதற்கு முன்னரும் இவ்வாறான கருத்துக்களை அவர் தெரிவித்திருக்கின்றார். இப்போது இந்தக் கருத்தை இந்தியாவில் வைத்துக் கூறியிருக்கின்றார்.

சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தால், புதுடில்லியின் ஆதரவை பெறலாமென்னும், பார்வையின் அடிப்படையில்தான் இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால், இவ்வாறான கருத்துக்களை புதுடில்லி எவ்வாறு நோக்குகின்றது என்பது வேறு விடயம். உண்மையில் சீனாவின் செல்வாக்கை ஓர் எல்லைக்குள் முடக்க வேண்டுமென்னும் ஆர்வம் புதுடில்லிக்கு நிச்சயம் இருக்கும். ஆனால், சீனாவின் வர்த்தக செயல்பாடுகளை ஓர் எல்லைக்கு மேல் கட்டுப்படுத்த முடியாதென்னும் யதார்த்தத்தையும் புதுடில்லி நன்கறியும். ஏனெனில், இந்தியாவும் - சீனாவும் பொருளாதார ரீதியில் நெருங்கிய ஊடாட்டங்களை கொண்டிருக்கின்றது. இந்தியாவும் சீனாவும் வர்த்தக உறவில் இருக்க முடியுமென்றால் - ஏன் இலங்கை சீனாவுடன் வர்த்தக உறவில் இருக்க முடியாதென்னும் கேள்வியிலிருந்துதான், நாம் இந்த விடயங்களை நோக்க வேண்டும்.

இலங்கையில் சீனாவின் காலூன்றல் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளாமல் இருக்க முடியாது. இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா கூடுதல் கரிசனையெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் ஆசையாக இருக்கின்றது. சீனாவை கட்டுப்படுத்துவதற்காக ஈழத் தமிழர்களை இந்தியா கையாளும் நிலைமையேற்படும் என்றவாறான புரிதலும் தமிழ் சூழலில் உண்டு. ஆனால், இந்த விடயம் தமிழ் தேசிய தரப்பினர் மத்தியில் சற்று மிகைப்படுத்தியே நோக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கில் சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க வேண்டுமாயின், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்பதே சுமந்திரனின் வாதமாக இருக்கின்றது. உண்மையில், இவ்வாறு கூறுவது இந்தியாவின் ஆளுமையை பரிகசிப்பதாகவே அமையும். ஏனெனில், ஒரு பிராந்திய சக்தியான இந்தியாவால், அதன் உடனடி அயல்நாட்டு விவகாரங்களை கையாள முடியாமல் தடுமாறுவதாகவும் - அதற்கு ஈழத்தமிழர்களை விட்டால் வேறு வழியின்றி இருப்பதாகவும் அமையும்.

சுமந்திரன் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் ஒன்றுண்டு. அதாவது, இவ்வாறு இந்தியாவை அணுக முடியாது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கையிலெடுப்பதன் மூலம்தான் இந்தியாவை நெருங்க முடியும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் எக்காலத்திலும் இலங்கையின்மீது தலையிடும் இந்திய பிரமாஸ்திரமாகும். மேலும், சீனாவும், தெற்காசியாவில் இந்தியாவின் செல்வாக்கை புரிந்துகொண்டே அதன் மூலோபாய இலக்குகளை நிர்ணயம் செய்கின்றது. ஓர் எல்லைக்கு மேல் சென்றால், அது இந்தியாவால் தடுக்கப்படும் என்னும் அரசியல் யதார்த்ததை புரிந்துகொள்ளாமல், சீனா போன்ற பலம்பொருந்திய சக்திகள் ஒருபோதும் செயல்படாது. எனவே, சீனாவை வைத்துக் கொண்டு புதுடில்லியிடம் செல்லலாம் என்னும் அணுகுமுறை ஈழத் தமிழர்களுக்கு பெரியளவில் கைகொடுக்கப் போவதில்லை ஆனால், தமிழர்களிடம் சீனா தொடர்பில் ஒரு கொள்கை நிலைப்பாடு இருப்பதில் தவறில்லை. அதனை தமிழர்கள் சொல்லிக் கொண்டிருப்பதிலும் தவறில்லை.

# காணாமலாக்கப்பட்டோருக்கான நஷ்டஈடு!

அலசுவது இராஜதந்திரி

**2009**ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவடைந்த காலம் முதல் காணாமலாக்கப்பட்டோரை தேடி அவர்களது உறவுகள் இடையறாது குரல்கொடுத்து வருகின்றனர்.

இருந்தபோதிலும் காணாமலாக்கப்பட்டோரை கண்டுபிடிக்கவோ அல்லது அவர்களை தேடும் முயற்சியில் ஈடுபடவோ முடியாதவர் களாக காணாமல்போனோரது உறவுகள் இருந்து வருகின்றனர்.

யுத்தத்தினால் துவண்டு தமது வாழ்வாதாரத்துக்குக்கூட இன்றுவரை சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தோராகவே காணாமலாக்கப்பட்டோரது குடும்ப உறுப்பினர்கள் பலர் காணப்படுகின்றனர். ககாணாமலாக்கப்பட்டோர் குறித்த விடயங்களை நோக்கும்போது கணவனை இழந்த மனைவி, மகன்மாரை இழந்த தாய், சகோதர , சகோதரிகளை இழந்த உறவுகள் எனப் பலதரப்பட்டவர்களாகவும் பாதிக்கப்பட்டவர்கள் காணப்படுகின்றனர்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் யுத்த நிலவரங்கள் உருவாக ஆரம்பித்தபோதே காணாமலாக்கப்பட்டோரை தேடி அவர்களது உறவுகள் அங்கலாய்த்து வந்திருந்தனர். ஆயினும் யுத்த நிலவரம் மோசமடைந்திருந்தமையாலும் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்திருந்தமையாலும் யாரிடம் கூறி முறையிடுவதென்ற நிலையிலேயே காணாமலாக்கப்பட்டோரது உறவுகள் இருந்தனர். வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கையோங்கியிருந்தபோது மட்டுமல்ல, அதற்கு முன்னர் ஏனைய ஆயுதப்போராட்ட அமைப்புகள் இயங்கிய காலத்திலும் பலர் காணாமல்போயிருந்தனர்.

ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே நிலவிய போட்டி, பூசல்கள், குத்துவெட்டுகள் என்பவை காரணமாக ஏராளமானோர் காணாமல்போயிருந்தனர்.

இருந்தபோதிலும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஆயதப்படையினரிடம் சரணடைந்தவர்களைப் பற்றிய தகவல்களை பெறமுடியாதவர்களாகவே காணாமல்போனோரது உறவுகள் இருந்து வருகின்றனர்.

இத்தகைய பின்னணியிலேயே காணாமல்போனோரது உறவுகளுக்கு நஷ்டஈடுகளை வழங்கவும் மரண சான்றிதழ்களை வழங்கி அவர்களது மறைவை உறுதிப்படுத்தவும் அரசு தரப்பு முன்வந்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நஷ்டஈடு, மரணச்சான்றிதழ்கள் வழங்குவதை வன்மையாக கண்டித்துள்ளதுடன் காணாமல் போயுள்ளவர்கள் சாதாரண விலங்கினங்களுக்கு ஒப்பானவர்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிடுகையில், காணாமல்போனோர் திருவிழாக்கால சனக்கூட்டத்திலோ அல்லது களியாட்ட நிகழ்ச்சிகளிலோ காணாமல் போயிருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளதோடு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பொலிஸாரிடமும் ஆயுதப்படையினரிடமும் அவர்களது வேண்டுகோளுக்கமைவாக வயது வேறுபாடின்றி சரணடைந்தவர்களே இன்றுவரை காணமல்போயுள்ளோர் பட்டியலில் முக்கியத்துவம் பெற்றவர்களாக இருக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.


இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்டோரில் மிக முக்கியமானவர் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபரான வணபிதா பிரான்ஸிஸ் ஜோசப் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதிக்கட்ட யுத்தம் முடிவுக்கு வந்தபோது வன்னியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அகதிகளாக இடம்பெயர்ந்தோர் மத்தியில் வட்டுவாகலில் வைத்து பொலிஸாரும், ஆயுதப்படையினரும் அறிவித்தல் ஒன்றை விடுத்தனர். அந்த அறிவித்தலில், தமிழீழ விடுதலைப்புலிகளோடு தொடர்புகளை பேணியோர் தாமாகவே முன்வந்து சரணடையும் பட்சத்தில் அவர்களை விசாரித்த பின்னர் விடுதலை செய்வதாக தெரிவித்தனர். அப்போது வணபிதா பிரான்ஸிஸ் ஜோசப் படையினரிடம் சரணடைந்தார். யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து வந்து கிளிநொச்சி யில் தங்கியிருந்தவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கமைவாக அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஆங்கிலம் கற்பித்ததே வணபிதா பிரான்ஸிஸ் ஜோசப் தமிழீழ விடுதலைப்புலிகளோடு கொண்டி ருந்த தொடர்பாகும். எனவே அவர் தாமா கவே முனவந்து சரணடைந்ததோடு அவரைப் போல சாதாரண தொடர்புகளை வைத்திருந்த ஏனையோரும் சரணடைந்திருந்தனர். வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆனந்தி சசிதரனின் கணவரான எழிலன் சசிதரனும் சரணடைந்தவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1995ஆம் ஆண்டு முதல் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு விசாரணைகள் பல முன்னெடுக்கப்பட்டன. ஆனால் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய உண்மை நிலவரத்தை ஆணைக்குழு விசாரணைகள் கண்டறியத் தவறியிருந்ததோடு பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்கவும் தவறியிருந்தன.

இந்நிலையில் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழ்களையும் நஷ்டஈட்டையும் வழங்க அரசு முன்வந்துள்ளது. அரசு பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டையும், காணாமலாக்கப்பட்டோருக்குரிய மரண சான்றிதழையும் வழங்க முன்வந்துள்ளமையை நோக்குகையில், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணா மலாக்கப்பட்டோர் பற்றிய விடயம் 'போர்க் குற்றம்' சம்பந்தப்பட்ட தென்பதை அரச தரப்பே மறைமுகமாக அங்கீகரிக்கின்றதோ என்றே கருதவேண்டியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மாசி - 19 சனிக்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 05
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : துவிதியை




**மேடம்**
எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு ஏற்றம் பெறுவீர்கள். மற்றவர்களுக்கு உங்கள் மேல்இருந்த நல்ல அபிப்ராயம் கூடும். கடந்த சில நாளில் தொடங்கிய முயற்சி நிறைவேறும்.

**இடபம்**
கோயிலுக்கு சென்று வருவீர்கள்,மன அமைதி கிடைக்கும். நீண்ட காலத்தேவை ஒன்று நிறைவடையும். கடன் குறையும். பணியிடத்தில் முன்னேற்றம் பற்றிய நல்ல தகவல் கிடைக்கும்.

**மிதுனம்**
நல்ல நோக்கத்துடன் எடுக்கும் முடிவு மற்றவரால் பாராட்டப்பெறும். மற்றவரிடம் கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பிக்கொடுப்பீர்கள். குடும்பத்தில் பழையபிரச்னை ஒன்று முடிவுக்கு வரும்.

**கடகம்**
உறவினரிடம் இருந்து வியக்கும் படியான செய்தி வரும். எதையும் நிதானித்து செய்வதால், இன்று நன்மை அடைவீர்கள். வெளி நாட்டு வேலை முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
எடுத்த வேலை இனிதே முடிவடையும். பணம் கணிசமாக கிடைக்கும் உழைப்பைக் கூட்டி மகிழ்ச்சியைக் அதிகரித்துக் கொள்வீர்கள். உங்களுடைய குடும்பத்தில் கலகலப்பு நிலவும்.

**கன்னி**
பிள்ளைகளிடமிருந்து பிரச்னை வரும். சமாளிப்பீர்கள். யாருடனும் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. நண்பர்களால் நன்மையும், லாபமும் உண்டு. மகிழ்ச்சி கூடும்.

**துலாம்**
குடும்ப நண்பர்களுக்கு உங்களால் நன்மை உண்டாகும். இன்று வேலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இத்தனை நாள் இருந்து வந்த மனபயம் நீங்கும்.

**விருட்சிகம்**
சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள். அமைதி நிலவும். வீண்விசயங்களை அதிகமாக கவனத்தில் கொள்ள வேண்டாம். அனுபவசாலிகளின் ஒத்துழைப்பால் தன்னம்பிக்கை கூடும்.

**தனுசு**
செயல் திறன்அதிகரிக்கும். பிரச்னைகளிலிருந்து ஒதுங்கியிருப்பீர்கள். பொது சேவைகளை முன்னின்று நடத்திப் புகழ் பெறுவீர்கள். பிறருடன் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

**மகரம்**
பயம் நீங்கி எதையும் சமாளிக்கும் திறன் வளரும் நாள். தொழிலில் முன்னேற்றங்கள் சற்று மந்தமாக இருக்கும். குடும்பத்தில் அவசியமற்ற செலவுகளை குறைப்பது நல்லது.

**கும்பம்**
முயற்சியில் சிறு தடை உண்டாகக் கூடும். பொறுமை அவசியம். உங்களது பேச்சு,செயலால் தீங்கு விளையாமல் கவனமாயிருங்கள். கூடுதலான பணவரவு உண்டு. சேமிப்பு கூடும்.

**மீனம்**
குடும்பத்தாருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். நன்மை கிடைப்பதற்குச் அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும்.

# பா.ஜ.கவை வீழ்த்துவதற்கு தேவையெனில் ஆம் ஆத்மி தலைமையை காங்கிரஸ் ஏற்கும்

## சர்சையை ஏற்படுத்திய சிதம்பரத்தின் அதிரடி பேட்டி

சென்னை, மார்ச் 19

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்த தேவைப்பட்டால் ஆம் ஆத்மி தலைமையையும் காங்கிரஸ் ஏற்கும் எனக் கூறியுள்ளார் காங்கிரஸின் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம்.

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்துள்ளது. இதனால் அந்த மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். இந்நிலையில் ப.சிதம்பரம் தனியார் ஆங்கில தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்துள்ளார். அதில் காங்கிரஸ் தலைவர் தேர்தல், காங்கிரஸின் பலவீனம், காங்கிரஸ் செய்ய வேண்டிய மீள் கட்டமைப்புப் பணிகள் எனப் பலவற்றையும் குறித்து விரிவாகப் பேசியுள்ளார். ஜி 23 என்ற காங்கிரஸின் மூத்த தலைவர்களின் கூட்டம் நடைபெற்ற நிலையில் சிதம்பரத்தின் பேட்டி கவனம் பெறுகிறது.



அந்தப் பேட்டியில் ப. சிதம்பரம்,“5 மாநில தேர்தல் தோல்விக்குப் பின்னர் காங்கிரஸ் தலைமைப் பொறுப்புகளில் இருந்து விலக சோனியா காந்தி, ராகுல் மற்றும் பிரியங்கா காந்தி முன்வந்தனர். ஆனால், காங்கிரஸ் காரிய கமிட்டி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு புதிய நிரந்தரத் தலைமையைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதே காரிய கமிட்டியின் விருப்பமும் கூட. அந்தத் தேர்தல் நடைபெற அதிகபட்சம் ஆகஸ்ட் வரை ஆகலாம்.

அதுவரை என்ன செய்யப் போகிறோம் என்பது முக்கியமானது.

அதுவரை சோனியா காந்தி தலைமையில் தான் நாங்கள் பணியாற்றப் போகிறோம். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்த தேவைப்பட்டால் ஆம் ஆத்மி தலைமையையும் காங்கிரஸ் ஏற்கும்” எனக் கூறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர் ஆரம்பம் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

சென்னை, மார்ச் 19

தமிழக பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று தொடங்கிய போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.



2022-2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை சட்டசபையில், நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார். அதன்போது, எம்.எல்.ஏ.க்கள் இருக்கைகள் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் கணினியில் பட்ஜெட் விவரங்களை பார்த்தனர்.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பட்ஜெட் உரையை வாசிக்க தொடங்கியதும், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேச அனுமதி கோரினார். சபாநாயகர் நிராகரித்ததால் அவையில் அ.தி.மு.க.எம்.எல்.ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது, முன்னாள் அமைச்சர் வேலுமணி வீட்டில் சோதனை ஆகியவை குறித்து அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் கேள்வி எழுப்பினர். முதலமைச்சராக இருந்த உங்களுக்கு, நிதிநிலை அறிக்கை மட்டும் படிக்கப்படும் என்பது தெரியும் தெரிந்தே பேச வேண்டும் என கூச்சல் போடுகிறீர்கள் என எடப்பாடி பழனிசாமிக்கு சபாநாயகர் பதில் அளித்தார்.

அதிமுகவினர் மீதான கைது நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.கவினர் கோஷம் எழுப்பினர். ஜனநாயகப் படுகொலையில் தி.மு.க. அரசு ஈடுபடுவதாக குற்றம் சாட்டினர். பட்ஜெட் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

# அ.தி.மு.க - அமமுக இணைப்பு?

சென்னை, மார்ச் 19

அ.தி.மு.க - அ.ம.மு.க. இணைப்பு தொடர்பில் தமிழக அரசியலில் பேசப்படும் நிலையில், அ.ம.மு.க. தலைவர் டிடிவி தினகரன் இன்று முதல் நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் ஓரளவுக்கு வெற்றி கிடைத்துள்ள நிலையில் உற்சாகம் அடைந்துள்ள டிடிவி தினகரன் அ.ம.மு.கவை வலுப்படுத்தும் செயலில் ஈடுபட்டு வருகிறார்.

இந்தநிலையில் அ.மு.மு.க. அ.தி.மு.க. இணைப்பு தொடர்பாக செய்திகள் கசிந்து வரும் நிலையில் இன்று முதல் 3 நாட்களுக்கு டிடிவி தினகரன் மாவட்ட வாரியாக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

# ஸ்டாலின் டுபாய் பயணம் தயாராகும் தனி விமானம்

தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின், வரும் மார்ச் 25, 26 திகதிகளில் டுபாய்க்குப் பயணம் மேற்கொள்கிறார். முதல்வர் பயணம் செய்வதற்காக தனி விமானம் தயாராகிக்கொண்டிருக்கிறது.

டுபாயில் 192 நாடுகள் பங்கேற்பில் நடைபெற்று வரும் உலக தொழில் கண்காட்சி (டுபாய் எக்ஸ்போ)யில் கலந்து கொண்டு தமிழ்நாட்டுக்கான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

கடந்த ஆண்டு பிற்பகுதியில் இருந்து நடைபெற்று வரும் டுபாய் எக்ஸ்போ எனப்படும் இந்த தொழில் காட்சியில் பங்கேற்கும் ஒவ்வொரு நாடும் அதன் பாரம்பரியம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்த ஒரு தனி அரங்கை நிறுவியுள்ளது. இந்த வகையில் இந்தியா அமைத்த அரங்கத்தை அண்மையில் ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் திறந்து வைத்தார்.

இந்திய அரங்கத்துக்குள் தமிழக அரசு தனது சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் அரங்குகளை அமைத்துள்ளது. மாநில அரசு விவசாயம் மற்றும் பல்வேறு துறைகளுக்கான முதலீடுகளை உலகளாவிய நிறுவனங்கள் மூலம் பெற் றிட இந்தத் தொழில் கண்காட்சியில் ஏற்பாடுகள் செய்திருக்கிறது.

## புனித வளனார் திருவிழா



யோசேப்பு இயேசுவின் வளர்ப்புத் தந்தை, கன்னி மரியாவின் காவலர். மரியாவுக்க அடுத்தபடியாக திருச்சபையின் வணக்கத்திற்குரியவர். இறைவன் இயேசுவை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை பணியாக இவருக்கு அளித்திருந்தார். இவரது அனைத்து பண்புகளையும் "இவர் ஒரு நீதிமான்" என்ற தொடரில் அடக்கி விடுகிறார் நற்செய்தியாளர் மத்தேயு (மத் 1:19)

யோசேப்பு இல்லத்தில் இருந்த துறவி நாசரேத் தூரில் எளிய வாழ்வு வாழ்ந்தவர். இவருடைய தொழில் தச்சுத் தொழில் இதனால் இயேசுவைக் குறிப்பிடும் போது "இவர் தச்சனின் மகன் அல்லரோ?" (மத் :13:35) என்று மக்கள் பேசிக்கொண்டனர். விவிலியத்திலே சில குறிப்புக்கள் இவரைப் பற்றி கூறினாலும் அவ்வளவு ஆழமான செயல்களையே குறிப்பிடுகின்றன. குடும்பத் தலைவரினின் பண்பையும், பணியையும் பொறுப்புகளையும் எவ்வாறு செயலாற்றி இறைவனின் திட்டத்துக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர்தான் புனித யோசேப்பு. இறை இயேசுவோடு, இயேசுவுக்காக வாழ்ந்த பெருமகன் யோசேப்பு இறுதியாக தம் பணி முடிந்தது என்று எண்ணி "ஆண்டவரே இப்போது உம் அடியானைப் போக விடு... மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன." (லூக் 2:29) என்ற சிமியோனின் பாடலுக்கேற்ப அவர்தம் பணியை நிறைவு செய்தார். நாமும் இப்புனிதரைப் போல் இறை சித்தம் நாடி வாடி வரம் வேண்டுவோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# இலங்கையுடன் விரைவில் பேச்சு

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



**கொழும்பு, மார்ச் 19**

**இலங்கைக்கு ஆதரவளிக்கும் வேலைத் திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் பேச்சாளர் கெரி ரைஸ் தெரிவித்தார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய-பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சென்யோங்-ரி கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிக்கல ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் நிவாரணத்துக்காக இலங்கை இன்னும் விண்ணப்பிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கோரிக்கை விடுக்கப்பட்டால், அதை பரிசீலிக்கலாம் என்று சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது.

எவ்வாறாயினும், இலங்கை அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்த உள்ளதாக முன்னதாக தெரிவித்திருந்தது.

இதற்காக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத்திட்டமொன்றுக்கு வருவதினூடாக, இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்கவும், வளர்ச்சியை நிலையான திசையில் செலுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# எரிவாயு தட்டுப்பாட்டால் ஹோட்டல்களுக்கு பூட்டு!

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், ஹோட்டல்களும், சிறு அளவிலான உணவு விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுவருகின்றன.

எதிர்காலத்திலும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் ஹோட்டல் தொழில் துறையில் உள்ள சுமார் 5 லட்சம் பேர் பாதிக்கப்படுவார் கள் என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பலர் தொழில்களை இழந்துள்ளனர் எனவும், ஹோட்டல்களுக்கான வாடகைப் பணத்தைகூட செலுத்த முடியாமல், உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சில ஹோட்டல்கள் திறக்கப்பட்டிருந்தாலும் அங்கு கொத்து ரொட்டி, ரைஸ் போன்ற உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை எனவும், விறகை பயன்படுத்தியே கடும் சவால்களுக்கு மத்தியில் சமையல் இடம்பெறுவதாகவும் அவர்கள் கூறினர்.

அதேவேளை, சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல்களை நடத்துபவர்கள், சமையல் எரிவாயு இன்மையால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## இ.போ.ச. பஸ்ஸில் தீ!

கொழும்பு, மார்ச் 19

புலகல பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு பயணிகளை ஏற்றிச் சென்ற போது குறித்த பஸ் தீப்பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது பஸ்ஸில் பயணிகள் இருந்தபோதிலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)



# பயங்கரவாத சட்டத்தை நீக்கக் கோரி காலி, மாத்தறையிலும் கையெழுத்து!

கொழும்பு, மார்ச் 19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை காலி மற்றும் மாத்தறையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதில் மூவின மக்களும் அணிதிரண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

இரு மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சஜித் எதிர்க்கட்சிக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், முற்போக்குக் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர். (அ)

# மன்னார் நகர எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணையை பெறுவதில் சிரமம்!



மன்னார், மார்ச் 19

மன்னார்-நகர மத்தியில் அமைந்துள்ள மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மக்கள் வீட்டுத் தேவைகளுக்கான மண்ணெண்ணையை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மாலை நேரங்களில் மண்ணெண்ணெய் வருகின்ற போதும் அதனை வீட்டு தேவைகளுக்காக சுமார் 5 லீற்றர் வரை பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனினும் தொழில் நடவடிக்கைகளுக்காக கொள்கலன்களில் சுமார் 50 லீற்றர் முதல் 100 லீற்றர் வரை மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மன்னார்-நகர மத்தியில் அமைந்துள்ள மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

மக்கள் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் நின்றனர். எனினும் வீட்டுப் பாவனைக்கான மண்ணெண்ணெயை கொள்வனவு செய்ய வந்த மக்களில் அதிகமானவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. தொழில் நடவடிக்கைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுமார் 20 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

இதனால் வீட்டு தேவைகளுக்காக குறிப்பாக எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் அடுப்பை (குக்கர்) பயன்படுத்துகின்றவர்கள் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் தமது வீட்டுப் பாவனைக்கான மண்ணெண் ணெயை பெற்றுக் கொள்ள வழி ஏற்படுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நாடு முழுவதும் நேற்று முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 19

நாடு முழுவதும் உள்ள பிரதேசங்களுக்கு, சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் இடம்பெறுவதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு 120,000 வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய தற்போது நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் கிரமமாக குறைவடையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையில், நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலில் இருந்து 3, 500 மெற்றிக் தொன் எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் நேற்று முன் தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டன. (அ)

# சர்வகட்சி மாநாடுகளால் எவ்வித பயனும் இருக்காது

## ஜே.வி.பி. தலைவர் கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச் 18

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை வளங்கள் சார்ந்த முரண்பாடுகளை அடையாளப்படுத்தி, அவற்றுக்கான தீர்வுகளை காண்பதற்கான கலந்துரையாடல் அரச அதிபர் கே. கருணாகரன் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.**

கொழும்பு, மார்ச் 19

"அரசியல் அழுத்தங்களை சமாளிப்பதற்காக நடத்தப்படும் சர்வக்கட்சி மாநாடுகளில் எவ்வித பயனும் இருக்காது. எனவே, உரிய ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே இது விடயத்தில் ஜே.வி.பி. உறுதியான முடிவை எடுக்கும்." - என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எதிர்வரும் 23 ஆம் திகதி சர்வக்கட்சி மாநாடு இடம்பெற உள்ளதெனவும், அதில் பங்கேற்குமாறும் எமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இதற்கு முன்னரும் சர்வக்கட்சி மாநாடுகள் இடம்பெற்றுள்ளன. தேநீர் அருந்துவதற்காகவும், ஒன்றாக இருந்து அரட்டை அடிப்பதற்காகவுமே அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. உரிய தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே, இம்முறை மாநாட்டுக்கு முன்னர் தரவுகள், தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். இம்மாநாட்டில் உண்மையான நல்ல நோக்கம் உள்ளதா



என்பதை ஆராய்ந்துவருகின்றோம். உரிய தகவல்கள் கிடைப்பில் நாமும் பங்கேற்று, யோசனைகளை முன்வைப்போம்- என்றார். (அ)

# அடம்பனில் யானை தாக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

மன்னார், மார்ச் 19

யானை தாக்கிப் படுகாயமடைந்த 3 பிள்ளைகளின் தாயார் 4 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சதனாந்தன் சுதா (வயது-46) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தார்.

மன்னார் முருங்கன் - அடம்பன் பகுதியில் கடந்த 13ஆம் திகதி அதிகாலையில் வீட்டு வளாகத்துக்குள் புகுந்த யானை குடும்பப் பெண்ணைத் தாக்கியுள்ளது.

அதிகாலை ஒரு மணிக்கு வீட்டுக்கு முன் உள்ள வீதியில் சத்தம் கேட்டுள்ளது. அதனால் வெளியே வந்த குடும்பத் தலைவர் ரோச் லைட் அடித்து பார்த்துள்ளார். அவரது மனைவியும் வீட்டு முற்றத்துக்கு வந்துள்ளார்.

அப்போது யானை ஒன்று வீட்டு வளாகத்துக்குள் நுழைந்து இருவரையும் தாக்க வந்துள்ளது. கணவர் வீட்டுக்குள் நுழைந்து கதவை பூட்டியுள்ளார். வீட்டுக்கு வெளியில் இருந்த மனைவி ஓடி மறைவாக இருந்துள்ளார்.

வீட்டுக்குள் நுழையாத யானை மறைந்து இருந்த பெண்ணைத் தாக்கிவிட்டு அங்கிருந்த மரங்களையும் அடித்து முறித்துவிட்டுச் சென்றுள்ளது.

யானை தாக்கிப் படுகாயமடைந்த பெண், மன்னார் மருத்துவனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் நான்கு நாள்களின் பின் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா மருத்துமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க அறிக்கையிட்டார்.

(அ-03)

# விவசாயிகளின் காணிகளை பறிமுதல் செய்யும் கபட நோக்கத்துடன் காணி சீர்திருத்தச் சட்டம்!

## தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் கூட்டாக எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 19

விவசாயிகளின் காணிகளை பறிமுதல் செய்யும் வகையில் கபட நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ள காணி அபிவிருத்தி சீர்திருத்தச்சட்டத்தின் 4ஆவது, 9 ஆவது சரத்துகளை மீளப்பெற வேண்டும் என 32 தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

பாராளுமன்றத்தில் தமக்கு இருக்கும் பெரும்பான்மை வாக்குகளை பயன்படுத்தி சிறு விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை கொண்டு வர வேண்டாம் என்று கோருகிறோம் எனவும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணி அபிவிருத்தி சட்டத்தின் சீர்திருத்தத்திற்கான இரண்டாம் வாசிப்பு கடந்த வெள்ளி பாராளுமன்றதில் நடைபெற்று நிறைவேறியது. இந்தச் சட்டம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின்போது விவசாயிகளின் கடன் பிரச்னை பற்றிய பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவின்மை வியப்பை தருகிறது.

விவசாயிகள் தமது காணிகளை வங்கிகளில் அடகு வைத்து கடன் எடுப்பதே அவர்களது கடன் பிரச்னைக்கு தீர்வு என பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை முன் வைத்திருந்தார்கள்.

இந்த சட்டசீர்திருத்தத்தின் பாரதூரமான விளைவுகள் பற்றி கூட கலந்தாலோசிக்க காலம் விடாது இச்சட்டம் அவசர அவசரமாக வாக்களிப்புக்குட்படுத்தப்பட்டு நிறைவேறியது.

காணி சீர்திருத்த சட்டமானது 'அரச மானியக்காணி உரித்தாளர்கள் அரச தலையீடு அற்று தமது காணி உரிமைகளை பெற்று சுயாதீனமாக இயங்க வழிவகுக்கின்றது' இது 'முற்போக்கானது' என்ற அரசின் பரப்புரை இச்சீர்திருத்தத்தை கொண்டுவருவதற்காக மக்களை திசை திருப்பும் அப்பட்டமான பொய். மேலும் பெண்களின் காணி உரிமைகளை வழங்குகின்ற போர்வையில் இந்த சீர்திருத்தம் கொண்டு வரப்படுகின்றது.

எனினும் கடந்த காலங்களில் பெண்களின் உரிமைகளை வழங்குதல் என்ற பெயரில் தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்க சட்டங்கள் இயற்றியதை போன்று இன்று காணி உரிமைகளை பறிக்கவும் பெண்களின் உரிமைகளை ஈடுபொருளாக பயன்படுத்தியுள்ளது அரசாங்கம்.

எனவே நாம் அரசாங்கத்திடம் இருந்து பின்வருவனவற்றை கோருகின்றோம் :

- காணிஅபிவிருத்தி சீர்திருத்தச்சட்டத்தின் 4ஆவது, 9 ஆவது சரத்துகளை மீளப்பெற வேண்டும்.

- பாராளுமன்றத்தில் தமக்கு இருக்கும் பெரும்பான்மை வாக்குகளை பயன்படுத்தி சிறுவிவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை கொண்டு வர வேண்டாம் என்று கோருகின்றோம்.

- இந்த சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுமாயின் விவசாயிகள் தமது காணிகளை வங்கிகளுக்கு இழந்து காணியற்றவர்காளாக்கப்படும் சூழ்நிலையை உருவாக்கியதற்கான பொறுப்பை இந்த அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நாம் அரசாங்கத்திற்கு நினைவுபடுத்தி நிற்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# ஒரு வாகனத்துக்கு பத்து லீற்றர் டீசல்!

## அரசு புதிய கட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 19

கொழும்பு மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் விநியோகத்துக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாகனத்திற்கு 10 லீற்றர் டீசல் மட்டுமே வழங்கவேண்டும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பில் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் வாகனம் ஒன்றுக்கு 10 லீற்றருக்கு மேல் டீசல் வழங்கக்கூடாதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இறுதியாக வந்த கப்பலிலுள்ள டீசலை சப்புகஸ்கந்தவில் சேமித்து வைக்க முடியாததே இந்தப் பிரச்னைக்குக் காரணம் என அவர் கூறினார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக டீசல் கப்பலில் இருந்த டீசலை முத்துராஜவெலயில் இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டதுடன், இந்த நிலையிலேயே இந்த பிரச்னை உருவாகியுள்ளது.

எரிபொருள் கொண்டு செல்லும் லொறி சாரதிகளின் வேலைநிறுத்தம் விநியோக வலையமைப்பையும் சீர்குலைத்துள்ள நிலையில், விநியோகத்தை சீரான முறையில் முன்னெடுக்க இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பண்டிகைக்காலம் குறித்து விழிப்பாகவே இருப்போம்!

## சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பெற்ற வெற்றியைத் தொடர்வதற்கு, மக்கள் எதிர்காலத்தில் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பேணிச் செயற்படவேண்டும் என சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர்.

பொருள் கொள்வனவு, ஆர்ப்பாட்டங்கள் அல்லது பொதுக் கூட்டங்களின்போது சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என சுகாதார சேவைகள்பிரதிப் பணிப்பாளர் நாயகம், நிபுணத்துவ வைத்தியர் ஹேமந்த ஹேரத் கோரியுள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த மக்கள் இப்போதே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மேலும் அவர் கூறினார்.

கடந்த காலத்தில் கொரோனா மரணம் மற்றும் தொற்றாளர் தொகை வெகுவாக குறைந்தது. இதனை பேணும் வகையில் பொதுமக்கள் ஒத்துழைக்குமாறு கோரப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி கொரோனா தொற்றினால் ஒருவர் மாத்திரமே உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெலிமடை உணவகம் ஒன்றின் நீர்த்தாங்கியில் சடலம் மீட்பு!

கொழும்பு, மார்ச். 19

வெலிமடை பகுதியில் உண வகம் ஒன்றின் நீர்த்தாங்கியில் இருந்து, சடலமொன்று மீட் கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த சடலம் பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் பணி யாற்றிய நபர் ஒருவரே நீர்த் தாங்கியில் வீழ்ந்து உயரிழந் தாரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அம்பகஸ்தோவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# நெருக்கடி வேளைகளில் எமக்கு இந்தியாவே கை கொடுக்கிறது!

## இராதாகிருஸ்ணன் பெருமிதம்

கொழும்பு, மார்ச் 19

இலங்கைக்கு எப்போதெல் லாமல் பிரச்னைகள் ஏற்படு கின்றதோ அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா எமக்கு கை கொடுத்திருக் கின்றது. விசேடமாக மோடி பிரதமராக பதவியேற்ற பின்பு இலங்கை தொடர்பாக அவர் அதிக கவனம் செலுத்தி வரு கின்றார் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணி யின் பிரதித் தலைவரும் நுவ ரெலியா மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரி விக்கையில்-

பக்கத்தில் இருக்கின்ற எங்கள் அண்டைய நாடான இந்தியாவை விட்டு விட்டு எங்கோ இருக்கின்ற சீனர்களை நாம் ஆதரிக்கின்றோம். அவர் கள் எங்கள் நாட்டின் அனைத்து வளங்களையும் கொள்ளையடிக்க காத்திருக் கின்ற ஒரு கூட்டம்.

இந்தியாவும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக் கின்றது. பௌத்த மதம் இந்தி யாவில் இருந்தே இலங்கைக்கு வந்தது.அதேபோல எங்களு டைய தொப்புள் கொடி உறவு கள் அங்கே எமக்காக குரல் கொடுக்கின்றார்கள்.எங்களு டைய கலை கலாசாரம் பண் பாடு என்பன இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக பயணிக் கின்றது.

மோடி பிரதமராக பதவி யேற்ற பின்பு எங்களுடைய



மலையகத்திற்கு விஜயம் செய்து தொப்புள் கொடி உறவுகளை அவர் சந்தித்தார். அவர்களுக்காக பல அபிவி ருத்தி வேலைகளை செய்வதற்கு முன்வந்தார்.

மோடி அரசாங்கத்துடன் நாம் இணைந்து பயணித்தால் நிச்சயமாக எதிர்காலத்தில் பல நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதே போல இலங்கை நாட்டுக்கு பிரதமர் மோடி விஜயம் செய்ய இருப் பது பாரிய பொருளாதார மாற் றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எனவே இவ்வாறான ஒரு நிலைமையில் நாங்கள் இந்தி யாவை அரவணைக்கவேண் டும். கடந்த காலங்களில் இந் திய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் செய்யப்பட் டது.இந்திய நாட்டு முதலீட் டாளர்களுக்கு எதிராக போராட்டம் செய்யப்பட்டது. அதனால் நாம் பெற்றுக் கொண்ட நன்மை என்ன? ஒன்றுமில்லை. ஆனால் சீனா இந்த நாட்டில் என்ன செய்தா லும் அதனை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதற்கு நாங் கள் தயாராக இருக்கின்றோம். எனவே நாங்கள் சிந்தித்து செயற் பட வேண்டும்-என்றார். (அ)

# பொதுத் தேர்தல் அல்ல, முதலில் ஜனாதிபதி தேர்தலே வேண்டும்

## சரத் பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

"பொதுத்தேர்தல் அல்ல, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத் தப்பட வேண்டும். இதுவே உறுதியான ஆட்சிக்கு வழிசமைக்கும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஏன் ஜனாதிபதித் தேர்தலை முதலில் கோரியுள் ளார் என ஊடகங்களால் எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதில ளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் நடத்தப் பட்டு எமது கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், மற்று மொரு கட்சி உறுப்பினர் ஜனாதிபதியாக இருந்தால்



அவர் தடையை ஏற்படுத் துவார். கடந்த ஆட்சியில் மைத்திரி செயற்பட்ட விதம் அனைவருக்கும் தெரியும்.

எனவேதான் முதலில் ஜனாதிபதித் தேர்தலைக் கோரு கின்றோம்.

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கட்சிதான் தீர்மானிக்கவேண் டும். அதில் தலைவரும் ஆதிக் கம் செலுத்துவார். கட்சி எடுக் கும் முடிவை நாம் ஏற்போம். ஆனால், பொதுவேட்பாளர் வெளியில் இருந்து வர முடி யாது. எமது கட்சி வேட்பாளர், பொதுவேட்பாளராகலாம்-என் றார். (அ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் ஆலை மீண்டும் மூடப்படும் அபாய நிலை

கொழும்பு, மார்ச் 19

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கச்சாய் எண் ணெய் முடிந்து விட்டது என்ற காரணத்தினால், நாளை மறு தினம் (20) முதல் சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திரிப்பு ஆலையை மூட நேரிடும் என தொழிற்சங்கங்கள் தெரிவித் துள்ளன.

எதிர்வரும் நாட்களில் எண் ணெய் சுத்திகரிப்பு நடவடிக் கைகளை முன்னெடுக்க தேவை யான மசகு எண்ணெய் இறக்கு மதி செய்யப்படவில்லை என பெற்றோலியம்-துறைமுகம் மற்றும் மின்சார சபை ஆகிய வற்றின் ஒருங்கிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

இதன் காரணமாக கால வரையறையின்றி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை மூட நேரிடும் எனவும் அவர் கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டால், இலங்கை தற்போது எதிர்நோக்கி இருக்கும் எரி பொருள் நெருக்கடி மேலும் உக்கிரமடையும். அத்துடன் மண்ணெண்ணெய் மற்றும் விமானத்திற்கான எரிபொரு ளையும் இறக்குமதி செய்ய நேரிடும்.

இதனை தவிர எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட் டால், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் 2 ஆயிரம் மெற்றிக் தொன் கழிவு எண்ணெய் கிடைக்காமல் போகும். இதனால், மின் உற்பத் தியும் குறைந்து போகும்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டாலும் அவ் வப்போது பராமரிப்பு பணி களை மேற்கொள்ள வேண்டும் என்பதால், ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவையும் வழங்க வேண்டும். இது மிகப் பெரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கி வரும் இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனத் துக்கு மற்றுமொரு சுமையாக மாறும்-என்றார். (அ)

# பிரச்னைகளை தீர்ப்பதற்கு கால அவகாசம் வேண்டும்!

## அமைச்சர் சந்திரசேன கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

"நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இதனை உணர்ந்து, பிரச்னை களைத் தீர்ப்பதற்கு மக்கள் எமக்கு சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டும்."

- இவ்வாறு அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது நிலவும் பிரச்னைகளுக்கு எந்தத் தரப்பு காரணம் என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இது நெருக்கடியான காலம். இதில் இருந்து மீள்வதற்கு எமக்கு



காலம் அவசியம். அந்த வாய்ப்பை மக்கள் வழங்க வேண்டும். அவ்வாறு வழங் கினால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

நெருக்கடியான சூழ்நிலையிலும் எதிரணியினர் அரசியல் இலாபம் தேட முற் படுகின்றனர்-என்றார். (அ)

# நாணய நிதியத்தை நாடும் முடிவை வரவேற்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு, மார்ச் 19

"சர்வதேச நாணய நிதி யத்தை நாடுவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை எமது கட்சி வரவேற்கின்றது." - என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான வஜிர அபே வர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு,



இன்றைக்கு ஒன்றரை வருடங் களுக்கு முன்னரே எமது கட்சி ஆலோசனை வழங்கியது. அதற் கான காரணங்களையும் தெளிவு படுத்தியது.

எனினும், நெருக்கடி உச்சம் பெற்ற பின்னரே, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்து ழைப்பை பெறும் முடிவை அரசு எடுத்துள்ளதும். இது காலம் கடந்த ஞானம். இருந் தாலும் தாமதித்தேனும் சிறந்த முடிவு எடுக்கப்பட்டதை வரவேற்கின்றோம்-என்றார்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக் கள் சக்தியும், அரசின் முடிவை வரவேற்றுள்ளது. (அ)

# அதிகரிக்கும் மக்களின் அதிருப்தியும் எதிரியினரின் எதிர்ப்பு பேரணிகளும்

**பவித்திரன்**



**தலைநகரில் பல்லாயிரக்கணக் கானோரைத் திரட்டி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை, அதிஉயர் பாதுகாப்பு வலயமாக உள்ள ஜனாதிபதி செயலகம் வரையில் நடத்த முடியும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி உணர்த்தியிருக்கின்றது. அத்தியவசியப் பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாடு என்பவற்றை முன்னி லைப்படுத்தியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டதால், மக்களைத் திரட்டுவது இலகுவானதாக இருந்துள் ளது.**

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் மீது அதிகரித்துவரும் மக்களின் அதிருப்தியை செவ்வாய்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப்பேரணி வெளிப்படுத்தியிருக்கின்றது. விலைவாசி பலமடங்காக அதிகரித்திருப்பதும், அத்தியவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் மக்கள் மத்தியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு தக்க சமயத்தில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பேரணியை நடத்திமுடித்திருக்கின்றது. ஆனால், இதன்மூலமாக அவர்கள் எதனை சாதிக்க முற்படுகின்றார்கள்?

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிடுவதுதான் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் இலக்கு எனவும், அதனை தடுக்க முற்படுவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் எனவும் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை ஒன்றைக் கொடுத்திருந்தார்கள். அதனையடுத்தே - ஜனாதிபதி செயல கத்தில் அன்று மாலை நடைபெறவிருந்த நிகழ்வுகள் அவசரமாக ரத்துச்செய்யப் பட்டன. ஜனாதிபதி உட்பட முக்கிய அதிகாரிகள் அங்கிருப்பதையும் தவிர்த்துக்கொண்டார்கள். மக்களின் சீற்றத்தை கட்டுப்படுத்த முடியாததாக இருக்கும் என்பதை அரச தரப்பு புரிந்துகொண்டிருந்தது.

ஜனாதிபதி செயலக முன்வாயிலை தகர்த்துக்கொண்டு உள்ளே செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அதிரடிப்படையினர் தடுத்துவிட்டார்கள். ஜனாதிபதி செயலக உள்வாயில் வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றிருப்பது இதுதான் முதல் முறை. இது ஒரு எச்சரிக்கையும் கூட. ஆனால், மக்கள் மத்தியில் காணப்படும் இந்த சீற்றத்தை எதிரணி எவ்வாறு பயன்படுத்தப்போகின்றது என்பதில்தான் அடுத்த கட்டம் உள்ளது. மாவட்டம் தோறும் ஆர்ப்பாட் டப்பேரணிகளை இதேபோல நடத்து வது ஐக்கிய மக்கள் சக்தியின் உபாயமாக இருக்கின்றது. இதன்மூலமாக நாடு முழு வதிலும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்த லாம் என அவர்கள் கணக்குப் போடுகின் றார்கள்.

தலைநகரில் பல்லாயிரக்கணக் கானோரைத் திரட்டி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை, அதிஉயர் பாதுகாப்பு வலயமாக உள்ள ஜனாதிபதி செயலகம் வரையில் நடத்த முடியும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி உணர்த்தியிருக்கின்றது. அத்தியவசி யப் பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாடு என்பவற்றை முன்னிலைப்படுத்தியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டதால், மக்களைத் திரட்டுவது இலகுவானதாக இருந்துள்ளது. வாழ்வாதாரப் பிரச்னையால் சீற்றத்துடனிருந்த மக்கள் பெருமளவளில் தாமாகவே முன்வந்து பேரணியில் இணைந்துகொண்டார்கள்.

ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற கோசமே இங்கு முன்னிலைப் படுத்தப்பட்டது. ஆளும் மொட்டு அணி யில் அண்மைக்காலத்தில் உருவாகியிருக் கும் உள்கட்சி மோதல்களும், இரண்டு அமைச்சர்கள் பதவிகளிலிருந்து தூக்கப் பட்டமையும் சிங்கள மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. ஜனாதிபதி மீதான அதிருப்தியையும் அதிகரித்திருந்தது. ஆளும் கூட்டணிக் குள்ளேயே ராஜபக்ஷக்கள் மீதான அதிருப்தி தீவிரமடைந்திருந்தது. ஆர்ப் பாட்டப்பேரணி வெற்றிகரமாக அமைந் தமைக்கு இவை அனைத்தும் காரணமாக இருந்திருக்கலாம்.

சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரையில் இது தனிப்பட்ட முறையிலும் அவருக்கு ஒரு வெற்றி என்று சொல்ல முடியும். காரணம்: சம்பிக்க ரணவக்க உள்ளுக்குள் இருந்துகொண்டே சஜித் துக்கு தொடர்தும் குடைசல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ராஜபக்ஷக்களை எதிர்கொள்வதற்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைத்தான் களத்தில் இறக்க வேண்டும் என்பதுடன், அதற்குப் பொருத்தமானவர் சம்பிக்க ரணவக்கதான் என ஒரு தரப்பு முயற்சிகளை முன்னெடுக்கின்றது. சம்பிக்க ரணவக்க இதனை இலக்காகக் கொண்டே 43 ஆவது படையணி என்ற அமைப்பையும் உருவாக்கியிருக்கின்றார்.

இந்த நிலையில், ராஜபக்சக்களை எதிர்கொள்வதற்கான வல்லமை தனக்குத்தான் இருக்கின்றது என்பதை இந்தப் பேரணியின் மூலம் சஜித் உணர்த்தியிருக் கின்றார். அவரது உரையிலும் அந்தத் தொனியை உணர முடிந்தது. தன்னுடைய ஆளுமையை, தலைமைத்துவத்தை வெளிப்படுத்த இந்தப் பேரணியை சஜித் பயன்படுத்தியிருந்தார். ஆனால், அரசுக்கு எதிரான இந்தப்போராட்டம் இதனுடன் முடிந்துவிடப் போகின்றதா அல்லது தொடர்ந்தும் முன் னெடுக் கப் படுமா என்ற கேள்வி ஒன்றுள்ளது. போராட் டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படா விட்டால், அரசாங்கத்துக்கு பாதிப்பு எதுவும் இருக் காது.




ஐக்கிய மக்கள் சக்தி எனது பலத்தை காட்டியிருக்கும் நிலையில் ஜே. வி.பி.யும் தமது பலத்தை வெளிப்படுத்துவதற்காக இவ்வாறான போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவிருப் பதாகத் தெரிகின்றது. பேரணிகளை நடத்துவதிலும், அதற்கான ஆட்களைத் திரட்டுவதிலும் ஜே.வி.பி.க்கு நிகராக மற்றொரு கட்சி நிற்க முடியாது. அதனால், மீண்டும் ஒரு முறை ஜே.வி.பி.யினால் கொழும்பு ஸ்தம்பிதமடையலாம். அல்லது வேறு சில நகரங்கள் முடக்கப்படலாம்.

ஆனால், இந்தப் பேரணிகளால் மட்டும் அரசாங்கத்தை மாற்றியமைப்பதோ அல்லது அரசாங்கத்தின் போக்கை மாற்றுவதோ சாத்தியமாகப் போவதில்லை. எந்தளவுக்கு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதி வீட்டுக்குச் செல்லப்போவதில்லை. கோட்டாபயவைப் பொறுத்தவரையில் அவருக்கு இன்னும் 3 ஆண்டுகள் உள்ளன. பாராளுமன்றத்தில் கொண்டுவரக்கூடிய குற்றப்பிரேரணை ஒன்றினால் மட்டுமே அவரைப் பதவி விலகச்செய்ய முடியும். ஆனால், அதற்கான சாத்தியம் மிகவும் குறைவு.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தொடரும் நிலையில் பாராளுமன்ற பெரும்பான் மையைக் கைப்பற்றுவதன் மூலம் மட் டும் எதனையும் சா திக்துவிட முடியாது. சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமராக இருந்த ரணிலுக்கு நடந்ததும், பின்னர் மைத்திரி ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் பிரதமராக இருந்து தடுமாறியதும் உண்மைக்கால உதாரணங்கள். இதனை சஜித் பிரேமதாசவும் உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது.

அதனால்தான், பாராளுமன்றத்தை இலக்கு வைக்காமல் ஜனாதிபதியை இலக்குவைத்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் அமைந்திருந்தது. ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பது பிரதான கோசமாக முன்னிலைப் படுத்தப்பட்டது அதற்காகத்தான். சஜித் பிரேதாசவும் தனது உரையில் ஜனாதிபதி வீடு செல்ல வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று முழங்கினார். ஆனால், கோட்டாபாய இந்த ஒருநாள் போராட்டத்துக்குப் பயந்துகொண்டு வீட்டுக்குச் செல்லும் ரகம் அல்ல. அதுவும் சஜித்துக்குத் தெரியும்.

அப்படியானால், கட்சிக்குள் தனது பிடியைப் பலப்படுத்துவதற்கும், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்தான்தான் என்பதை உறுதிப்படுத்தவும்தான் இந்த பேரணியை சஜித் ஏற்பாடு செய்திருந்தாரா?

அல்லது விரைவில் நடைபெறக் கூடிய மாகாண சபைத் தேர்தல்கள் அல்லது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் களுக்கு முன்னதாக அரசின் மக்கள் செல் வாக்கை ஆட்டங்காணச் செய்வதுதான் அவரது இலக்கா?

எப்படியிருந்தாலும், ராஜபக்ஷக் களுக்கு சாகமான ஒரு நிலை இப்போது இல்லை. ஆனால், இதனைப் பயன் படுத்தி ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த எதிரணி முற்படும் எனவும் எதிர்பர்க்க முடியாது. தற்போதைய பிரச்சினைகளை தாமே சுமக்க வேண்டிய நிலை இதனால் ஏற்படும் என்ற அச்சம் அவர்களுக்குள்ளமையும் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

ஆக. அதிகரித்துள்ள மக்களின் அரச எதிர்ப்பை உயித்துடிப்புடன் முன்ன கர்த்துவதுதான் எதிரணியினரின் தற்போதைய அரசியலாக இருக்கும். ∎







# அவுஸ்திரேலிய வெள்ள அனர்த்தத்தில் காலநிலை மாற்றமும் பங்காளியா?

நியூசிலாந்து சிற்சபேசன்

**புவி வெப்பமடைவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களின் வரிசை நீண்டதாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களூடனான அநாவசியமான சீண்டல்கள் அதிகரிக்கின்றன. அதனால் புவியின் இயல்பான சமன்பாடு அசைக்கப்படுகின்றது. பனிப்பாறைகள் உருகுகின்றன. கடல்மட்டம் அதிகரிக்கின்றது. அதியுச்சமான மழைப்பொழிவு ஏற்படுகின்றது.**

அவுஸ்திரேலியாவிலே, சுமார் நூறு ஆண்டுகளுக்கொருதடவை ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்ற வெள்ள அனர்த்தம் பெப்ரவரி மாதத்தையொட்டிய காலப்பகுதியில் ஏற்பட்டது. அதிலே தேசத்தின் கிழக்குக்கரையே பாதிக்கப்பட்டதாகும். குவின்ஸ்லாந்து மாநிலத்தின் தென்கிழக்காகவும், நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தின் வடக்காகவும் காணப்படுகின்ற நிலப்பரப்பே பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இரண்டு மாநிலத்தலைநகரங்களான பிரிஸ்பேர்னும், சிட்னியும்கூட பாதிக்கப்பட்டிருந்தன.

அவுஸ்திரேலியா எதிர்கொள்கின்ற சவால்களில் வெள்ளப்பெருக்கு குறிப்பிடத்தக்கதாகும். பதினோரு ஆண்டுகளுக்கு முன்னர் கடுமையான வெள்ளப்பெருக்குக்கும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காட்டுத்தீ அனர்த்தத்துக்கும்கூட மேற்படி பிரதேசங்கள் முகங்கொடுத்திருந்தன.

மழைநீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்களின் போதாமையோ அல்லது மேலதிகநீர் முகாமைத்துவத்திலான தொய்வுகளோ, வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு காரணமல்ல. மாறாக, அதியுச்சமான மழைவீழ்ச்சி சடுதியாக ஏற்படுவதே காரணமாகிவிடுகின்றது.

ஒருபுறத்தில், மழைவீழ்ச்சியின் அளவு அதிகரித்திருக்கின்றது. மறுபுறத்தில், அவ்வாறான மழைவீழ்ச்சி குறுகியகால அளவிலேயே ஏற்பட்டுவிடுகின்றது. அதனாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

அவ்வாறானதொரு சூழ்நிலைக்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, அவுஸ்திரேலியா அமைந்துள்ள நிலப்பரப்பை அண்டிய பகுதிகளிலே ஏற்படுகின்ற இயல்பான வானிலை மாற்றங்களாகும். மற்றையது, காலநிலை மாற்றமாகும்.

அதிலேயும்கூட, வானிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஒரளவு துல்லியமாகக் கணிப்பிடப்படுகின்றன. ஆனால், காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களே எதிர்பார்க்க முடியாத விபரீதங்களை ஏற்படுத்துகின்றன. அதிக மழைவீழ்ச்சி, காட்டுத்தீ, வறட்சி என ஒன்றுக்கொன்று முரணானதாகவும் அமைந்துவிடுகின்றன. அத்துடன், குறுகியகால இடைவெளியில் சடுதியாக ஏற்படுகின்றன. அந்தவகையிலேயே, அவுஸ்திரேலியாவின் வெள்ள அனர்த்தம் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

அவுஸ்திரேலியக் கண்டத்தை இரண்டு சமுத்திரங்கள் சூழ்ந்திருக்கின்றன. ஒன்று, பசுபிக்சமுத்திரம். மற்றையது, இந்துசமுத்திரம். அவுஸ்திரேலியா இரண்டு வகையான வானிலைக்கூறுகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. ஒன்று, லாநினோ என அழைக்கப்படுகின்றது. மற்றையது, எல்நினோ எனச் சுட்டப்படுகின்றது.

அண்ணளவாக ஒருவாரத்துக்கான மழைநீரை புவியின் வளிமண்டலம் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. லாநினோ வானிலைக்கூறு காணப்படுகின்ற வேளையில், பசுபிக் சமுத்திரத்திலே தென்னமெரிக்காவை அண்டிய பகுதி அதிககுளிரானதாகவும், அவுஸ்திரேலியாவை அண்டிய பகுதி அதிகவெப்பமானதாகவும் காணப்படுகின்றது. அதனாலே, அதிகளவிலான ஈரப்பதம் கடலிலிருந்து புவியின் வளிமண்டலத்துக்கு உந்தித்தள்ளப்படுகின்றது.

இதனைக் கேத்தலில் தண்ணீர் கொதிக்கவைப்பதுடனும் ஒப்பிட்டுச் சொல்லலாம். கேத்தலிலுள்ள தண்ணீர் அதியுச்சமாகக் கொதிக்கும்போது, நீர்த்துவலைகள் கேத்திலின் மேற்பக்கத்தில் தேங்குகின்றன அல்லவா. மேற்பரப்பின் கொள்ளளவு நிறைந்தவுடன், மேலே சேர்ந்தநீர் கேத்தலில் திரும்ப விழுகின்றதல்லவா.

அதுபோலவே, கடலிலிருந்து உந்தித்தள்ளப்படுகின்ற ஈரப்பதத்தினால் வளிமண்டலத்தின் கொள்ளளவு உச்சம் தொடுகின்றபோது மழையாகக் கொட்டித்தீர்க்கின்றது. அதனாலேயே, லாநினோ காலப்பகுதியிலே அதிகளவிலான மழைவீழ்ச்சி ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

லாநினோ வானிலைக்கூறு மூன்றிலிருந்து ஐந்துவருட இடைவெளியில் ஏற்படுவதாகக் கணிக்கப்படுகிறது. 1900ஆம் ஆண்டுக்குப் பிந்தையதாக இற்றைவரை முப்பதுவரையான லாநினோ ஆண்டுகள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

அண்மைக்காலமாக அவுஸ்திரேலியா எதிர்கொள்ளும் வெள்ள அனர்த்தம் லாநினோ நிகழ்வாக மட்டும் கருதமுடியவில்லை. அதேவேளையில், காலநிலை மாற்றமே காரணமென அறுதியாகச் சுட்டுவிரலை நீட்டவும் முடியவில்லை.

லாநினோ வானிலைக்கூறு இயல்பானது மட்டுமல்ல. புதியதுமல்ல. அஃது ஏற்படுத்துகின்ற விளைவுகளில் அண்ணளவாகவேனும் ஒரு ஒழுங்குமுறை உள்ளது. ஆனால், காலநிலைமாற்றம் அப்படியானதல்ல.

அதனால், லாநினோ வானிலைக்கூறு ஏற்படுத்துகின்ற மழைவீழ்ச்சியை, காலநிலைமாற்றம் உக்கிரப்படுத்துவதாகச் சொல்லலாம். அந்தவகையிலே, அவுஸ்திரேலியாவின் வெள்ளஅனர்த்தத்தின் உக்கிரத்தன்மைக்கு காலநிலைமாற்றமே உந்துசக்தி என்று கொள்ளலாம்.

இன்றைய காலகட்டத்தில், யுத்தம், கொவிட்பேரிடர் போன்றவிடயங்கள் அதிக கவனத்தைப் பெறுகின்றன. அவற்றுடன் ஒப்பிடுகையில் அதிகப்படியான தாக்கத்தை மட்டுமல்ல, நீண்டகாலவிளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதே காலநிலை மாற்றமாகும். புவிவெப்பமயமாதல் குறித்த பிரசங்கங்கள் கடந்த இரண்டு சகாப்தங்களாகப் படிப்படியாக அதிகரித்தே வந்திருக்கின்றன.

புதைபடிவ எரிமங்களான நிலக்கரி, பெற்றோலியம், இயற்கை எரிவாயு போன்றவை மீதான மிதமிஞ்சிய சார்பு ஆபத்தானது என்பதை அரைநூற்றண்டுக்கு முன்னரேயே அவுஸ்திரேலியாவின் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் அரசுக்கு சுட்டிக்காட்ட ஆரம்பித்திருந்தனர்.

கரியமிலவாயு (கார்பனீராக்சைடு) புவிவெப்பமடைதலில் முக்கிய பங்காளியாகும். கரியமிலவாயுவை வெளிவிடுவதிலே புதைபடிவ எரிமங்களின் பங்கு கணிசமானது. வாகனங்கள், தொழிற்சாலைகள் போன்றவை கரியமிலவாயுவை அதிகமாக வெளிவிடுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றபோதும் கரியமிலவாயு குறிப்பிடத்தக்க அளவுகளிலே வெளியாகின்றது. இவ்வாறாக வளிமண்டலத்தில் கரியமிலவாயுவின் செறிவு அதிகரிக்கின்றது. அதனாலே புவி வெப்பமடைகின்றது.

தொழில்புரட்சிக்கு பிந்தயைகாலத்தில் ஏற்பட்ட அபரிவிதமான வளர்சியில் தொழிற்சாலைகள் பெருகின. அதனால், ஒரு டிகிரி செல்சியஷ் வரையில் புவிவெப்பமடைந்திருக்கின்றது. அஃது இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இரண்டு டிகிரி செல்சியஷ் அளவைத் தொடலாம் என அஞ்சப்படுகின்றது.

புவி வெப்பமடைவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களின் வரிசை நீண்டதாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களூடனான அநாவசியமான சீண்டல்கள் அதிகரிக்கின்றன. அதனால் புவியின் இயல்பான சமன்பாடு அசைக்கப்படுகின்றது. பனிப்பாறைகள் உருகுகின்றன. கடல்மட்டம் அதிகரிக்கின்றது. அதியுச்சமான மழைப்பொழிவு ஏற்படுகின்றது.

அசாத்தியமான வேகத்தில் வெள்ளப்பெருக்கு உருவாகின்றது. காட்டுத்தீ மிரட்சியை ஏற்படுத்துகின்றது. மிதமிஞ்சிய வெப்பம் வாட்டுகின்றது. வறட்சி அதிகரிக்கின்றது. நீர்பற்றாக்குறை வேகமடைகின்றது. சூறாவளி அச்சுறுத்துகின்றது. வைரஸ் தொற்று உள்ளிட்ட பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறாக மானிடம் தொடர்ச்சியான அனர்த்தங்களை எதிர்கொள்கின்றது. ஆனாலும்கூட, காலநிலைமாற்றம் ஏற்படுத்துகின்ற பாரிய தாக்கங்களை மானிடம் கண்டுகொள்வதேயில்லை.

அத்தகையசூழலிலேயே, அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட வெள்ளஅனர்த்தத்திலே, காலநிலைமாற்றதின் பங்கு துருத்திக்கொண்டு தெரிகிறது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

26. 5, 8, 10, 15, 18, 20

(1) 5, 10 (2) 8, 18 (3) 15, 20

27. கண்காட்சி ஒன்றைப் பார்ப்பதற்காக நின்றவர்களின் வரிசையில் முரளிக்கு முன்னால் 12 பேரும் பின்னால் 8 பேரும் நின்றனர். வரிசையின் நடுவில் நிற்பவர் வரிசையின் எத்தனையாவது ஆளாவார்?

(1) 10 (2) 11 (3) 12

28. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாமா எங்கள் வீட்டுக்கு வருவார். ஜுன் மாதம் 26 ஆந் திகதி அவர் வீட்டுக்கு வந்திருந்தார் எனின், அடுத்து எப்போது அவர் வீட்டுக்கு வந்திருப்பார்?

(1) ஜுலை 2 (2) ஜுலை 3 (3) ஜுலை 4

29. பெறுமானம் கூடிச் செல்லும் வகையில் எண்களை ஒழுங்குபடுத்தினால் எழுத்துக்கள் அமையும் ஒழுங்கு எது?

| P | 90909 | Q | 99009 | R | 90990 | S | 99900 | T | 90099 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(1) TPRQS (2) TPSQR (3) TPQRS

30. 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களை எழுதும்போது '7' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 11 (2) 19 (3) 20

31. மார்ச் மாதத்தின் இரண்டாம் நாள் வெள்ளிக் கிழமை ஆகும். அம்மாதத்தில் இரண்டாவதாக வரும் திங்கட்கிழமை மாதத்தின் எத்தனையாம் நாளாகும்?

(1) 11 (2) 12 (3) 14

32. ரமணி வேலைக்குச் செல்வது, வாரத்தின் திங்கள், புதன், சனி ஆகிய நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும்.
ராணி வேலைக்குச் செல்வது, வாரத்தின் செவ்வாய், வியாழன், சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும்.
இருவரும் வேலைக்குச் செல்லும் நாட்கள் எவை?


(1) செவ்வாய், ஞாயிறு
(2) வியாழன், வெள்ளி
(3) வெள்ளி, ஞாயிறு

33. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். பின்வருவனவற்றில் எது பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையாகும்?


(1) 273 (2) 292 (3) 346

34. மீனாவின் அம்மாவின் மகன் மீனாவின் மகனுக்கு என்ன உறவு?


(1) அப்பா (2) பாட்டன் (3) மாமா

35. 


இங்கு தரப்பட்டிருப்பது சில சதுரமுகிகளை இணைத்து ஆக்கப்பட்ட ஒரு வடிவமாகும். இதனை மேலிருந்து நேராகப் பார்க்கும் போது இது தோற்றும் விதத்தினைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

36. 

இந்த உருக்கள் இரண்டையும் சேர்க்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

37. பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிய மாணவன் ஒருவன் 15 வினாக்களுக்கு மாத்திரம் சரியாக விடை எழுதி 40 புள்ளிகளைப் பெற்றான். பரீட்சை வினாக்களில் சிலவற்றுக்கு 2 புள்ளிகளும், சிலவற்றுக்கு 4 புள்ளிகளும் வழங்கப்பட்டன எனின், அம்மாணவன் சரியாக விடை எழுதிய 2 புள்ளிகளுக்குரிய வினாக்கள் எத்தனை?

(1) 5 (2) 10 (3) 12

## விடைகள்

26. (2) 27. (2) 28. (2)
29. (1) 30. (3) 31. (2) 32. (3) 33. (2) 34. (3) 35. (2)
36. (3) 37. (2)

### கல்வி tv CHANNEL-1

19.03.2022
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

19.03.2022
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை அந்த மாகாணத்துக்கே நியமிக்கவேண்டும்!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

திருமலை, மார்ச் 19

**தற்போது வழங்கப்படவுள்ள கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நிய மனங்களில் கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களைக் கிழக்கு மாகாணத்திற்கே நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தனவிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டிலுள்ள கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மிகவும் முக்கியமான இந்த விடயத்தை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். 2021ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் ஆளணி சுற்றறிக்கைக்கு அமைய கிழக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதனைவிடக் கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இங்கு காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை ஆசிரியர்களே நிரப்பி வருகின்றனர்.

இந்த வகையில் மொத்தமாகக் கிழக்கு மாகாணத்தில் 4 ஆயி



ரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் தற்போது காணப்படுகின்றன. கிழக்கு மாகாணம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை போன்ற பொதுப் பரீட்சை பெறுபேறுகளில் தொடர்ந்து பின் தங்கி வருவதற்குப் பெரியளவு காணப்படும்.

இந்த ஆசிரியர் பற்றாக்குறை பிரதான காரணமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தான் கடந்த எமது நல்லாட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்திற்கே நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தற்போது வழங்கப்படுகின்ற கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நியமிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது வெளியாகியுள்ள பெயர்ப்பட்டியலின் மூலம் இதனை அறிந்து கொள்ள முடிகின்றது. மாவட்ட மற்றும் பிரதேச வெற்றிடங்களின் அடிப்படையிலேயே கல்வியியற் கல்லூரி பயிற்சி ஆசிரியர்களுக்கான தெரிவு இடம்பெறுகின்றது.

எனவே, தற்போதைய இந்த நியமனம் கல்வியியற் கல்லூரி தெரிவு முறைக்கு முரணாக அமைந்து விடும் என்பதை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இதனைவிட கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடம் இருக்கும்போது அந்த மாகாண வெற்றிட அடிப்படையில் கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவான ஆசிரியர்களை வேறு மாகாணங்களுக்கு நியமிக்க முயற்சிப்பது கிழக்கு மாகாணம் தொடர்ந்து கல்வியில் பின் தங்குவதற்குக் காரணமாக அமைந்து விடும்.

எனவே இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை அவர்கள் கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட வலய மற்றும் மாவட்ட அடிப்படையில் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கும் பொருட்டு அவர்களைக் கிழக்கு மாகாணத்திற்கு இணைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)



### வான்-மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

திருமலை, மார்ச் 19

திருகோணமலை - கந்தளாய், போட்டன்காடு சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் வான் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்து கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கந்தளாய் போட்டன்காடு சந்தியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடத்திலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

# கோறளைப்பற்று மேற்கில் புதிய குடிதண்ணீர் திட்டம்!

மட்டக்களப்பு, மார்ச் 19

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்தின் கீழ் "அனைவருக்கும் நீர்" எனும் தேசிய வேலைத்திட்டம் நாடு பூராகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைவாக மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலய பாடசாலை நிர்வாகம் நீர் வழங்கல் அமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க காவத்தமுனை பாடசாலை மற்றும் அதனை சூழவுள்ள பகுதி மக்களுக்கு தேவையான குடிதண்ணீரை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளுக்கிடையில் சிநேகபூர்வமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் நீர் குழாய்கள் புதிதாக பதிக்கப்படுவதற்கான குழி தோண்டும் நடவடிக்கைகளை பிரதேச சபையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் செலவினங்களை கட்டுப்படுத்தி நீர்வழங்கலுக்கு செலவிடப்பட்ட செலவினங்களில் அரைவாசி நிதியை பயன்படுத்தி இத்திட்டத்தை மக்களுக்கு இலகுவாக நிறைவான முறையில் மேற்கொண்டு செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைவாக இவ்வேலைத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.பீ. எம்.அலியார் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

காவத்தமுனை அல் அமீன் மஹா வித்தியாலய அதிபர் ஏ.பி.எம்.அலியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், ஓட்டமாவடி பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.எம்.அஜ்மீர், நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பாளர் யூ.எல்.ஜவாத், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது ஜன பெரமுன கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், கல்வி அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)





# அக்கரைப்பற்று மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தீர்த்தோற்சவம்





அம்பாறை, மார்ச் 19

அம்பாறை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பழம்பெரும் சிவாலயங்களில் ஒன்றான அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பனங்காடு அருள்மிகு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

கடந்த 08ஆம் திகதி ஆரம்பமான திருக்கொடியேற்றப் பெருவிழாவானது 09ஆம் திகதி இடம்பெற்ற கொடியேற்றம் நேற்று முன்தினம் இடம்பெற்ற சங்காபிசேகம், நேற்று இடம்பெற்ற தீர்த்தோற்சவம், இன்று இடம்பெறும் பூங்காவனம், 20ஆம் திகதி இடம்பெறும் வைரவர் பூசையுடன் நிறைவுறுகின்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற வசந்த மண்டப விசேட யாக பூஜைகளை தொடர்ந்து பக்தர்களின் அரோகரா எனும் வேண்டுதலுடன் பக்தர்கள் புடை சூழ மங்கள வாத்தியங்கள் முழங்க மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தீர்த்தோற்வத்தில் கலந்து கொள்வதற்காக பக்தர்களினால் தேரில் இருத்தி ஆலய தீர்த்தக்கேணிக்கு தூக்கிச் செல்லப்பட்டார்.

தீர்த்தக் கேணிக் கரையில் அமர்த்தப்பட்ட பெருமானுக்கு அபிசேக பூசைகள் இடம்பெற்றதுடன் தீர்த்தோற்சவமும் இடம்பெற்றது. (அ)

# ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைன் நடிகை மரணம்



கீவ், மார்ச் 19

உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது ரஷ்ய ஏவுகணை ஒன்று நடத்திய தாக்குதலில் உக்ரைன் நாட்டு நடிகை ஒக்சானா ஸ்வெட்ஸ் (வயது-67) உயிரிழந்து உள்ளார்.

இதனை தி ஹொலிவுட் ரிப்போர்ட்டர் என்ற பத்திரிகையும் உறுதி செய்துள்ளது.

உக்ரைன் நாட்டில் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் உயரிய விருது நடிகை ஒக்சானாவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைன் போரை நிறுத்த புடினின் 2 நிபந்தனைகள்!



மொஸ்கோ, மார்ச் 19

உக்ரைன் போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினின் தரப்பில், இரண்டு வகையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக, துருக்கி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல், ஜனாதிபதி விளாடிமிர் புடின் துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனை தொலைப் பேசியில் அழைத்து, உக்ரைனுடன் சமாதான உடன்படிக்கைக்கு ரஷ்யாவின் துல்லியமான கோரிக்கைகள் என்ன என்பதை கூறியுள்ளார்.

தொலைபேசி அழைப்பு முடிந்த அரை மணி நேரத்திற்கு பிறகு, எர்டோகனின் முன்னணி ஆலோசகரும் செய்தித் தொடர்பாளருமான இப்ராஹிம் கலின் ரஷ்யாவின் கோரிக்கைகள் குறித்து விவரித்துள்ளார்.

ரஷ்ய கோரிக்கைகள் இரண்டு வகைகளாகும். முதல் நான்கு கோரிக்கைகள், கலினின் கூற்றுப்படி, உக்ரைனுக்கு மிகவும் கடினமானதாக இல்லை என எடுத்துக்கொள்ளலாம்.

அவற்றில் முக்கியமானது, உக்ரைன் நடுநிலையாக இருக்க வேண்டும் மற்றும் நேட்டோவில் சேர விண்ணப்பிக்கக் கூடாது. ஆனால், இதை உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளார். (அ)

# மேற்கு நைஜரில் பஸ்ஸின் மீது ஆயுதமேந்திய குழு தாக்குதல்!

## 19 பேர் உயிரிழப்பு



புர்கினா பாசோ, மார்ச் 19

புர்கினா பாசோவின் எல்லைக்கு அருகில் மேற்கு நைஜரில் பேருந்து மீது ஆயுதமேந்திய குழுவொன்று நடத்திய தாக்குதலில், இரண்டு பொலிஸார் உட்பட குறைந்தது 19பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஐந்து பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை நைஜரின் தில்லாபெரி பிராந்தியத்தில் உள்ள பெட்டல்கோல் எல்லைக்கு அருகில் போனோ கிராமத்திற்கு அருகே மோட்டார் சைக்கிள்களில் வந்த ஜிஹாதிஸ்ட் குழுவொன்று பஸ்ஸை இடைமறித்து, பஸ்ஸுக்கு தீ வைப்பதற்கு முன்பு பயணிகளைச் சுட்டுக் கொன்றதாக பயணிகள் போக்குவரத்து நிறுவனங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த பஸ், புர்கினா பாசோவின் தலைநகர் ஒவாகடுகோவில் இருந்து நைஜர் தலைநகர் நியாமிக்கு சுமார் 30 பேருடன் பயணித்துக்கொண்டிருந்தது.

பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வருவதற்குள் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். அத்துடன், சம்பவ இடத்தில் மேலும் இரண்டு லொறிகள் தீப்பிடித்து எரிந்தன.

தாக்குதலுக்கு எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை, ஆனால் இதேபோன்ற தாக்குதல்கள் அல்-கெய்டா மற்றும் இஸ்லாமிய அரசு குழுவுடன் தொடர்புடைய ஜிஹாதி குழுக்களால் புர்கினா பாசோவின் எல்லைக்கு அருகில் உள்ள தில்லாபெரி பகுதியில் தொடர்ந்து நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்தது, உக்ரைன் ரஷ்யாவுக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை உறுதிப்படுத்த ஆயுதக் குறைப்பு செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உக்ரைனில் ரஷ்ய மொழிக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும்.

உக்ரைன் அனைத்து வகையான நவ-நாசிசத்தையும் கண்டித்து, அவற்றைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளித்தால் போதுமானதாக இருக்கும் என முதல் வகை கோரிக்கைகள் உள்ளன.

இரண்டாவது வகை கோரிக்கைகள், இந்த விடயங்களில் உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பு தனக்கும் ஜனாதிபதி ஸெலென்ஸ்கிக்கும் இடையே நேருக்கு நேர் பேச்சுவார்த்தைகள் தேவை என்று புடின் கூறியுள்ளார்.

ஸெலென்ஸ்கி ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதியை சந்திக்கவும், அவருடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இருப்பதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கிழக்கு உக்ரைனில் உள்ள டொன்பாஸின் நிலையை குறிப்பிட்டுச் சொல்லாமல், கிழக்கு உக்ரைனில் உள்ள நிலப்பரப்பை உக்ரைனிய அரசாங்கம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று ரஷ்யா கோரும் என கலின் அனுமானித்துள்ளார். (அ)

# 43 சுகாதார கட்டமைப்புக்கள் மீது உக்ரைனில் ரஷ்ய படை தாக்குதல்

## 12 பேர் பலி! 34 பேர் காயம்!!



கீவ், மார்ச் 19

உக்ரைனில் வைத்தியசாலைகள் உள்ளிட்ட 43 சுகாதார சேவை நிலையங்கள் மீது ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குல்களில் இதுவரை 12 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 34 பேர் காயமடைந்துள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்தில் இணையவழி வீடியோ தொழில்நுட்பம் ஊடாக நேற்று முன் தினம் கலந்துகொண்டு உக்ரைன் சுகாதார நெருக்கடி நிலைகள் குறித்துக் கருத்து வெளியிட்ட உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கப்ரேயஸ் இதனைத் தெரிவித்தார்.

மருத்துவமனைகள் உள்ளிட்ட சுகாதார சேவை நிலையங்கள் மீதான தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுவதாகும். மக்களுக்கு எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவசர உதவிகள் மையங்களாக இருக்கும் சுகாதார கட்டமைப்புக்கள் மீதான தாக்குதல் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள சுகாதார அமைப்புகளை மேலும் சிதைப்பதாக உள்ளது. அதைத்தான் உக்ரைனில் நாங்கள் பார்த்து வருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யப் படைகளின் தாக்குதலால் அங்குள்ள மக்கள் போதிய மருந்துகள், உணவு, போர்வைகள் உள்ளிட்டவற்றுக்கான கடுமையான பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றனர்.

உக்ரைனிய மனநல மருத்துவமனைகள் மற்றும் நீண்டகால பராமரிப்பு வசதிகளில் 35,000 க்கும் மேற்பட்ட உளநலன் பாதிக்கப்பட்ட நோயாளிகள் உள்ளனர். அவர்களுக்கான உளநலச் சேவைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு இதுவரை 40 வீதமான மக்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் தொற்றுநோயின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது எனவும் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பு இதுவரை ஒரு மாதத்திற்கு தேவையான ஒட்சிசன், இன்சுலின், அறுவை சிகிச்சை பொருட்கள், மயக்க மருந்துகள் மற்றும் இரத்தம் ஏற்றும் கருவிகள், ஒட்சிசன் ஜெனரேட்டர்கள், மின் ஜெனரேட்டர்கள் என சுமார் 100 மெற்றிக் தொன் மருத்துவப் பொருட்களை உக்ரைனுக்கு அனுப்பியுள்ளது. மேலும் 108 மெற்றிக் தொன் மருத்துவ உதவிப் பொருட்களை அனுப்ப உலக சுகாதார அமைப்பு தயாராகி வருகிறது எனவும் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரி வித்தார். (அ)



# ரஷ்ய இராணுவத்தினரின் தாக்கும் திறன் கட்டுக்குள்!

## பிரித்தானியா தகவல்

லண்டன், மார்ச் 19

உக்ரைனிய படையினரின் இடைவிடாத எதிர்தாக்குதல் காரணமாக, ரஷ்யப் படைகளின் தாக்கும் திறன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, பிரித்தானியா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக உக்ரைனில் தங்கள் தாக்குதலை தொடர்வதில் ரஷ்யப் படைகள் போராடிவருவதாக, பிரித்தானியா பாதுகாப்பு அமைச்சின் சமீபத்திய உளவுத்துறை மதிப்பீடு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ராணுவ தளவாட பிரச்னைகள் தொடர்வதால், உக்ரைன் மீதான படையெடுப்பில் ரஷ்யப் படைகள் முன்னேற முடியாமல் தள்ளாடிவருகிறது.

ரஷ்யப் படையினரின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் மற்றும் வான்படை பற்றாக் குறை காரணமாக, அப்படையினருக்கு அத்தியாவசிய பொருட்களான உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்டவற்றை விநியோகிக்க இயலவில்லை.

இடைவிடாத உக்ரைனிய எதிர்தாக்குதல் காரணமாக, தங்களின் விநியோகச் சங்கிலியை காப்பதற்காக அதிகளவிலான ரஷ்யப்படைகளை திசைதிருப்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 7,000 ரஷ்ய படையினர் உயிரிழந்ததாக அமெரிக்கா மதிப்பிட்டுள்ளது. ஆனால், 500க்கும் குறைவான ரஷ்ய படையினரே உயிரிழந்த தாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (அ)

# ரூட், ஸ்ரோக்ஸ் சதம் இங்கிலாந்து 507ஃ9

*பிரிட்ஜ்ரவுன், மார்ச் 19*

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் ஜோ ரூட், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் சதத்தால் இங்கிலாந்து அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 507 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

மேற்கிந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில், முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த 16ஆம் திகதி பிரிட்ஜ்ரவுனில் தொடங்கியது. முதல் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து 3 விக்கெட் இழப்புக்கு 244 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரூட் 119 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது, ரூட்டுடன் இணைந்தார் பென்ஸ்ரோக்ஸ். ரூட் பொறுமையாக ஆட ஸ்ரோக்ஸ் அதிரடியாக ஆடினார்.

73 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் அரைச்சதம் கடந்தார் ஸ்ரோக்ஸ். ரூட் 150 ஓட்டங்களைப் பூர்த்தி செய்து 153 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில்




தொடர்ந்து அதிரடி காட்டிய 11 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 114 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார் ஸ்ரோக்ஸ். 128 பந்துகளில் 120 ஓட்டங்களை எடுத்த அவர் பிராத்வெயிட்டின் பந்தில் ஆட்டமிழந்தார்.

எனினும், பின்னர் வந்த வீரர்கள் ஆட்டத்தில் சொதப்பவே, 150.5 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 507 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் வீராசாமி பெருமாள் 3 விக்கெட்களையும், கெமர் ரோச் 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு கிரைக் பிராத்வெயிட், காம்பெல் இணை தொடக்கம் கொடுத்தது. காம்பெல் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே, அடுத்து வந்த புரூக்ஸ் பிராத்வெயிட்டுடன் இணைந்து ஆடினார். இரண்டாம் நாள் ஆட்டம் முடி வில் 27 ஓவர்களில் மேறகிந்தியத் தீவுகள் ஒரு விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ஐ)



## இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் படோஸாவும் அரையிறுதியில்!

*கலிபோர்னியா, மார்ச் 19*

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் தொடரில் வளர்ந்து வரும் முன்னணி வீராங்கனையான படோஸா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் நேற்று இறுதிக் காலிறுதிப் போடடி நடந்தது.

இதில், ரஷ்யாவின் வெரோனினா குடெர்மெடோவாவை படோஸா எதிர்கொண்டார். இந்தப் போட்டியில் எதிர்ப்பின்றி படோஸா 6 - 3, 6 - 2 என்ற செற் கணக்கில் இலகு வெற்றி பெற்றார்.

படோஸா இன்று நடக்கும் அரையிறுதிப் போட்டியில் கிரேக்கத்தின் மரியா சக்காரியை எதிர்கொள்கிறார். (ஐ)

## ஐ. பி. எல். கிண்ணத்தை ராஜஸ்தான் கைப்பற்றும்!

### குமார் சங்ககார

*புதுடில்லி, மார்ச் 19*

ராஜஸ்தான் அணியை முழுமையாக மாற்றியுள்ளோம். கிண்ணம் வெல்வதே இலட்சியம் என்று அந்த அணியின் பயிற்றுநர் குமார் சங்ககார கூறியுள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் ராஜஸ்தான் அணி கடந்த மூன்று வருடங்களாக மோசமாக விளையாடி வருகிறது. 2019இல் 7ஆம் இடம், 2020இல் 8ஆம் இடம், 2021இல் 7ஆம் இடம் எனப் புள்ளிகள் பட்டியலில் இடம்பிடித்தது. இதனால் இந்த வருடம் அந்த அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சஹால், அஸ்வின், டிரெண்ட் போல்ட், பிரசித் கிருஷ்ணா, ஜேம்ஸ் நீஷம் போன்ற வீரர்கள் இடம்பெற்றுள்ளார்.

ராஜஸ்தான் அணியைப் பற்றி அந்த அணியின் தலைமைப் பயிற்றுநரும் முன்னாள் இலங்கை அணியின் தலைவருமான குமார் சங்கக்கார தெரிவித்தவை வருமாறு,

போட்டி நடைபெறாதபோது அணியில் செய்யவேண்டிய மாற்றங்கள் பற்றி அறிந்திருந்தோம். எந்தெந்த விஷயங்களைக் கவனிக்க வேண்டும் எனப் பார்த்தோம். சரியான நடைமுறையின்படியே ஏலத்தில் வீரர்களைத் தேர்வு செய்தோம். வலுவான அணி உருவாக்கப்பட்டுள்ளது. வீரர்களை எப்படித் தேர்வு செய்தாலும் இனி மைதானத்தில் எப்படி விளையாடுகிறோம் என்பது முக்கியம்.

கடந்த வருடம் சரியாக விளையாடாததற்கு பல காரணங்கள் உண்டு. அவையெல்லாம் கடந்த காலம். அதனால்தான் அணியை மாற்றியுள்ளோம். புதிய போட்டியில் கவனம் செலுத்துகிறோம். இந்த வருடம் கோப்பையை வெல்வதுதான் எங்களுடைய இலட்சியம் - என்றார்






## ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகினார் மார்க் வூட்!

*லண்டன், மார்ச் 19*

ஐ. பி. எல். தொடரில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியில் இடம்பிடித்த மார்க் வூட் விலகியுள்ளார்.

கடந்த வாரம் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முழங்கையில் ஏற்பட்ட காயத்தாலேயே அவர் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு பந்துவீசும் பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையில், அவரின் காயம் உடனடியாக குணமடையும் நிலை இல்லை என்பதாலேயே அவர் இந்தத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

ஐ. பி. எல். ஏலத்தில் 7.5 கோடி இந்திய ரூபாய்க்கு லக்னோ அணி மார்க் வூட்டை வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கோலி அபாயகரமானவர்

### மக்ஸ்வெல்

*சிட்னி, மார்ச் 19*

வரவிருக்கும் ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் அணியின் தலைமை பொறுப்பு சுமை இல்லாத, அழுத்தங்கள் இல்லாத விராட் கோலி எதிரணிக்கு அபாயகரமானவர் என கிளென் மக்ஸ்வெல் தெரிவித்துள்ளார்.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் கிளென் மக்ஸ்வெல் கோலி குறித்து கூறுகையில்,

“விராட் கோலி இனிமேல் ஆக்ரோஷமான வீரர் கிடையாது. பெரிய சுமையாக இருந்த தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கிறோம் என அவருக்குத் தெரியும்.

தலைமைப் பொறுப்பிலிருந்த அழுத்தத்தை அவர் இறக்கிவைத்திருப்பது எதிரணிகளுக்கு அபாயகரமான செய்தி. அழுத்தங்கள் இல்லாமல் இருப்பது அவருக்கு அற்புதமான ஒன்று. வெளியிலிருந்து எவ்வித அழுத்தங்களும் இல்லாமல், அடுத்த சில ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையை அவர் அனுபவிக்கட்டும்.” - என்றார். (ஐ)

# சத்தியாக்கிரகத்துக்கு தயாராகிறது ஐ.தே.க.!

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய தேசியக் கட்சியின் சத்தியாக்கிரக போராட்டமொன்று எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியுமே குறித்த சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். (அ)

# தாய்ப் பால் புரைக்கேறி 8 மாதக் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

தாய்ப்பால் அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்ற 8 மாதப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது. பால் புரைக்கேறியமையே உயிரிழப்புக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுக்கோட்டை, அராலி வடக்கைச் சேர்ந்த யோகசீலன் கிருத்திகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை தாய்ப்பால் அருந்திவிட்டு உறங்கிய குழந்தை அதிகாலை 4.30 மணியளவில் அசைவற்றுக் காணப்பட்டுள்ளது.

குழந்தை உடனடியாக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், குழந்தை ஏற்கனவே உயிரிழந்தமையை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-21 அராலி வீதி ஆதன இல 50/31 என்ற ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் எமது பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 2998ம் இலக்க 05.05.2005ம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகமட் யூசுப் சமீன் என்பவர் இவ்வாதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த முகமட் யூசுப் சமின் பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் வழங்கப்பட்ட 1269ம் இலக்க 08/03/2006ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்னை கோவிற்பற்று வண்ணார் பண்னை வடமேற்கு இறை "பாம்படி மயிலன் புங்கடி" உத்தரவு பெற்ற, நில அளவையாளர் ஆ.நவரட்ணம் 20.05.1989 திகதியில் அளந்த 7 துண்டுகளாக பிரிவிட்டு, வரைந்த 1207 இலக்கப் படத்தின் படி நெற் பர.62 குளி 0.02 இதில் துண்டு "1"எனச் சுட்டப்பட்ட பாகம் நெற்பர 1.4 குளி 11.40 இதில் கிழக்கு பக்கமாக நெற் பர. 08 குளி 06 இனை உத்தரவு பெற்ற அளவையாளர் பி.தனராஜா 30.04.2005 திகதியில் அளந்து 06 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வரைந்த 2743ம் இலக்கப் படத்தின் படியும் விஸ்தீரணம் நெற்.பர. 8குளி 6 இல் குறித்த 2743ம் இலக்கப்படத்தின் படி துண்டு 4 எனச் சுட்டப்பட்ட பாகம் நெற்.பர (2) இரண்டும் அதற்குரியவைகளும் இதன் எல்லை

கிழக்கு:- 12 அடி அகலமான ஒழுங்கை

வடக்கு:-குறித்த 2743ம் இலக்க படத்தில் துண்டு எனச் சுட்டப்பட்டதும் சீனி முகமது அபூகாதிர் என்பவரது ஆதனம்

மேற்கு:- இதன் மிகுதியான ஆதனம்

தெற்கு:- குறித்த 2743ம் இலக்கப்படத்தின் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட பாகம் இவ் எல்லைகளும் இதடங்கலும்.

தற்போது முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இரவீந்திரன் பெண் செல்வதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்,**



# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனையகங்கள்

## விரைவில் திறக்கப்படும் என்கிறார் பந்துல

**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்க உள்ளதாக வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட வத்தகத்துறை அமைச்சர் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகதுறை சம்பந்தமான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடபகுதியில் உணவுப் பற்றாக்குறை மற்றும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக 20 சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்க உள்ளோம். அவ்வாறு திறப்பதன் மூலம் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை தங்குதடையின்றி பெற்றுக் கொள்ளமுடியும். அத்தோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள உணவு களஞ்சியசாலைகளில் அத்தியாவசியப் பொருட்களை சேமித்து வைத்து சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக தமது அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அபாயகரமான ஒரு பொருளாதார நிலையே தற்போது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கொரோனா நோய் காரணமாக பல வல்லரசு நாடுகளிலும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் எமது நாட்டிலும் இந்த கொரோனா சூழ்நிலையின் காரணமாகவே பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா-உக்ரைன் யுத்தத்தின் காரணமாக எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களின் விலையும் அதிகரித்து காணப்படுகின்றது. எனினும் தற்போது நாட்டின் ஜனாதிபதியின் இயற்கை விவசாய முறையை மக்கள் பயன்படுத்த தொடங்கியதன் காரணமாக விவசாய உற்பத்தியில் பெரிதாக பாதிப்பு ஏற்படவில்லை.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் பொருளாதார தாக்கமானது அனைத்து நாடுகளையும் பாதித்துள்ளது. அத்தோடு எமது உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியும்-என்றார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வர்த்தக தொழில் துறை அமைச்சர் பந்துல குணவர்தன, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணை தலைவருமான அங்கஜன் ராமநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், ஏற்று மதித் திணைக்கள பணிப்பாளர், யாழ்ப்பாண வணிகர் கழக பிரதிநிதி, வர்த்தக தொழில் துறை மன்ற பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-03)

# ரூ.160,000 ஐ எட்டிய தங்கத்தின் விலை!

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் தங்கத்தின் விலை நேற்று ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என அதிகரித்து வரலாற்றில் முதல் தடவை புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரை மீது போர் தொடுத்துள்ளதால் சர்வதேச பங்குச் சந்தை மீதான முதலீடு குறைவடைந்து தங்கம் மீதான முதலீடு அதிகரித்துள்ளது. இதனால் உலக சந்தையில் தங்கத்தின் விலை பெருமளவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பும் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 700 ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த வார ஆரம்பத்தில் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபாயாக காணப்பட்டது.

24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த வார ஆரம்பத்தில் 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டது. (அ)

# பொருளாதார நெருக்கடியால் கொள்ளைகளா? அப்படி எதுவுமே இல்லை என்கிறது பொலிஸ்

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுவதில் உண்மை இல்லை என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், பொது மக்கள் கொள்ளைச் சம்பவங்கள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக சிலர் பொய்யான பிரசாரங்களை பரப்புவதாக அவர் மேலும் கூறினார்.

எவ்வாறிருப்பினும் சிறப்பு அங்காடிகளையும், வீடுகளையும் உடைத்துப் பொருட்களைக் கொள்ளையிடும் சம்பவங்கள் சில பிரதேசங்களில் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸ் நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

## உக்ரைனுக்காக...

“இலங்கையில் உள்ள தூதரகங்களின் தலைவர்கள் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கம் எங்களுடன் இணைந்து உக்ரைனுக்கும் சர்வதேச சட்டத்துக்கும் ஐ. நா. பிரகடனத்துக்கும் வாய்மொழி மூல ஆதரவை வழங்கவேண்டும்.”, அவர்கள் விடுத்துள்ள கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“இறைமையுள்ள ஜனநாயக நாடான உக்ரைன் மீதான ரஷ்யாவின் தூண்டப்படாத நியாயமற்ற சட்டவிரோத படையெடுப்பை நாங்கள் மிகவும் கடுமையாக கண்டிக்கின்றோம். இந்த மூர்க்கத்தனமான தாக்குதல் ஐ. நா. சாசனம் உட்பட சர்வதேச சட்டத்தை முற்றிலும் மீறும் செயலாகும்.

உக்ரைன்மீதான ரஷ்யாவின் போர் மனிதாபிமான பேரழிவை ஏற்படுத்தியுள்ளதை உலகம் அச்சத்துடன் பார்த்தவண்ணமுள்ளது. ரஷ்யா பொதுமக்கள் வாழும் பகுதிகள் கட்டமைப்புகள் மீதான தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதன் காரணமாக பொதுமக்களிற்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட மில்லியன் கணக்கான மக்கள் அயல்நாடுகளிற்கு அகதிகளாக தப்பி வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக கடந்த 70 வருடங்களில் மிகவேகமாக அகதிகள் நிலைமை ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் படையெடுப்பு என்பது அமைதியான நாட்டின்மீதான தூண்டப்படாத நியாயமற்ற நடவடிக்கையாகும்.

உலகில் சமாதானம் அமைதி என்பவற்றுக்கான அடித்தளமாக உள்ள இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு ரஷ்யா அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் சாசனம் கடந்த காலங்களில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அது அமைதி பாதுகாப்பு அபிவிருத்தி, நீதி, சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரிமைகளின் பக்கம் உறுதியாக நின்றுள்ளது.

சர்வதேச சமூகம் உக்ரைனிலும் அனைத்து மனித குலத்திற்கும் இந்த விழுமியங்கள் உறுதிப்படுத்தப்படுவதை தனது அதிகாரத்தை பயன்படுத்தி உறுதி செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கைக்கு நாங்கள் முழுமையான ஆதரவை வெளியிடுகின்றோம்.

உக்ரைனுக்கான மிகப்பெரும் ஆதரவு காரணமாக ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. உக்ரைன்மீதான ரஷ்ய அரசாங்கத்தின் தாக்குதலை கண்டிப்பதில் நாங்கள் ஐக்கியப்பட்டுள்ளோம். மார்ச் இரண்டாம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 141 நாடுகள் ரஷ்யாவை கண்டிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

இது ரஷ்யா சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. ரஷ்யாவுக்கு கடும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் நாடுகள் முன்னர் ஒருபோதும் இடம்பெறாத வகையில் ரஷ்யாவுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளன. உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களை தொடரும் ரஷ்யாவின் திறனை குறைப்பதும், உக்ரைனுக்கு எதிரான விரோதப் போக்கிலிருந்து ரஷ்யாவை பின்வாங்க செய்வதற்கான அழுத்தத்தை கொடுப்பதுமே இதன் நோக்கம்.

வங்கிகள் முதல் எண்ணெய் நிறுவனங்கள் உதைபந்தாட்ட கழகங்கள் வரை புடினின் நடவடிக்கைகளுக்கு விளைவுகள் இருக்கும் என்பதையும் அவரின் அரசாங்கம் இனிமேல் சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியாக விளங்க முடியாது என்பதையும் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. உக்ரைனின் சகாக்களும் நண்பர்களும் குறிப்பிடத்தக்க அளவு மனிதாபிமான மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளன. பல நாடுகள் உக்ரைனிலிருந்து தப்பிவருபவர்களுக்கு தங்கள் எல்லைகளை திறந்துள்ளன. தனது படையெடுப்பை நியாயப்படுத்தும் விதத்தில் ரஷ்யா பொய்யான கதைகளை வெளியிடுகின்றது.

ரஷ்யா அதன் படையெடுப்பை நியாயப்படுத்தும் ஒரு போலி முயற்சியில் உக்ரைன் அரசாங்கத்துக்கு எதிரான போலியான பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது. அதன் ஜனநாயக அயல்நாடுகளை அழிக்க நினைக்கும் ரஷ்யாவின் பிரசாரம் எந்த நியாயமும் இல்லாதது.

நேட்டோ ஆத்திரமூட்டுகின்றது என ரஷ்யா பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது. நேட்டோ எப்போதும் ஒரு தற்பாதுகாப்பு கூட்டணியாகவே இருந்துவந்துள்ளது. அதனால் ரஷ்யாவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. நாங்கள் உக்ரைனுக்கும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கும் இலங்கை ஆதரவளிக்க வேண்டும் - எங்களுடன் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம். (ஐ)

## மகனே...

திங்கட்கிழமை அதிகாலை வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். பரசுராமன் ஆறுமுகம் (வயது 54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளில் தெரிய வந்தவை வருமாறு,

மதுபோதைக்கு அடிமையாக இருந்த இறந்தவரின் மகன், மதுபானம் வாங்குவதற்காக தந்தையிடம் அடிக்கடி பணம் கேட்டுள்ளார். இதனால், இருவரிடையேயும் முரண்பாடு ஏற்பட்டது. இந்நிலையில், மாட்டுப் பட்டியிலுள்ள மாடுகளை திருடி விற்றுள்ளார். இதனை தந்தை அறிந்த நிலையில் இருவரிடையேயுமான முரண்பாடு முற்றியுள்ளது.

இந்த நிலையில், தனது நண்பன் ஒருவரிடம் 50ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்து தந்தையையே கொலை செய்துள்ளார்.

இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கத்தி, நாடா மற்றும் அவரை தாக்கப் பயன்படுத்தப்பட்ட கல் என்பவற்றை சான்றுப் பொருட்களாக பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மகனையும் அவரின் நண்பரையும் கைது செய்துள்ள பொலிஸார் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## வயிற்றோட்டத்தால்...

சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு குழந்தைக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தையை நேற்றுக் காலை பெற்றோர் நெடுந்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

எனினும், குழந்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு வரும் முன்னரே உயிரிழந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## பொருளாதார...

மத்திய நிலையம் இன்று சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு மத்திய நிலையத்தையும், வர்த்தக தொகுதிகளையும் திறந்து வைக்கவுள்ளார்.

மாவட்ட விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக 30ற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையத் தொகுதிகள் மத்திய நிலையத்துடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூடப்படும் நிலையில் லிட்ரோ நிறுவனம்!

கொழும்பு, மார்ச் 19

சிலிண்டர் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன், இந்த நிலைமை மூன்று மாதங்களுக்கு நீடித்தால் நிறுவனத்தை மூடப்படும் நிலைமை ஏற்படும் என்று அந்த நிறுவனத்தின் விளம்பர முகாமையாளர் பியல் கொலம்பஹெட்டிகே தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் எஞ்சியுள்ள ஒரேயோர் எரிவாயு நிறுவனத்தைக் காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது, எரிவாயு இறக்கப்படும் கப்பலால் நிறுவனத்துக்கு 20 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. 2021இல் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்த வருடத்தில் மட்டும் 100 கோடி ரூபாய் இதுவரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# கௌரவமாக பதவி விலகுங்கள்!

## ஜனாதிபதியிடம் கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 19

”ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்துக்கு அஞ்சியே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். தோல்வியை ஏற்றுக்கொண்ட அவர் கௌரவமாகப் பதவி துறக்கவேண்டும்”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது: -

நாட்டில் பல பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. எனினும், ஜனாதிபதி மௌனம் காத்தார். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் நடைபெறவுள்ளது என்ற தகவல் வந்ததும் அவர் விழித்துக் கொண்டார். மக்கள் கூட்டத்தை கண்டதும் அஞ்சிவிட்டார். அதனால்தான் அர்த்தமற்ற உரையை ஆற்றினார்.

தன்னால் முடியாது, தான் தோல்வி என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே, அவர் கௌரவமாகப் பதவி துறக்க வேண்டும்-என்றார். (அ)

# வவுனியா சிறையில் இருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்!

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பகுதியில் வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின்பேரில் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவேளை தப்பியோடியுள்ளார்.

இவர் நேற்று அதிகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பித்து சென்றுள்ளார். தப்பிச் சென்ற கைதியை வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடி வருகின்றனர். (அ)

## மருத்துவ...

விலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வெவ்வேறு அளவுகளுக்கு ஏற்ப அதிகரிக்கப்படவுள்ளன. முன்னதாக மருந்துப் பொருட்களின் விலைகளும் 29வீதத்தால் உயர்வடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கந்தரோடையில்...

காலமாக விளங்கிய கந்தரோடைப் பகுதியில் கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் பௌத்தம் நிலவியது. இதற்கான சான்று ஆதாரங்கள் இன்றளவும் அந்தப் பகுதியில் காணப்படுகின்றன.

தவிர, இந்தப் பகுதியில் தமிழர்களின் தொன்மை அறிவியலுக்கு சான்று பகரும் விதமாகப் பல பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களத்தால் தொல்லியல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றை வாங்கியுள்ள பிக்கு ஒருவர் அங்கு விகாரை ஒன்றை அமைக்க முயற்சி செய்து வருகிறார்.

விகாரை கட்டுமானத்துக்கு வலி. தெற்கு பிரதேச சபையும் அனுமதி அளித்துள்ளது. இந்நிலையிலேயே இன்று யாழ்ப்பாணம் வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இங்கு விகாரை ஒன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுவார் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, இந்த காணி தோப்பாம் பள்ளம் என்று அழைக்கப்படுவதாகவும், முன்னைய காலத்தில் இந்தப் பகுதியில் ஆட்சி செலுத்திய உக்கிரசிங்கன் என்ற அரசன் காலத்து தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன என்றும் மக்களால் கூறப்படுகின்றது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் வலி. தெற்கு பிரதேச சபையினரை தொடர்பு கொண்டு கேட்டபோது, வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு மடம் அமைப்பதற்காகவே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## திடீர் காற்று,...

மாவட்ட இடர்முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேநேரம், மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் வீடு ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் சேதமடைந்தன என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## மருந்துகள்...

மனைகளில் உள்ள இந்த நடை முறை சிக்கல்களுக்கு தீர்வு வழங்காமல் அரசு செயலற்ற கொள்கையை பின்பற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்னும் ஒரு வாரத்தில் இலங்கையிலுள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளும் மூடப்படும். வாகனங்களில் பணிக்கு வரும் மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்களுக்கு எரிபொருள் பிரச்னை ஏற்படுகிறது. மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் உணவு சமைப்பதற்காக சமையல் எரிவாயு பிரச்னை ஏற்படலாம்.

நோயாளிகளுக்கு கொடுக்க மருந்து இல்லை. இந்த பிரச்னைகளை அரச அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை. இந்த நிலைமை அதிகரிக்கும் வரை நீங்கள் காத்திருக்கிறீர்களா? இது அதிகரித்தால், ஒட்டுமொத்த மருத்துவமனை அமைப்பும் முடக்கப்படும். அரசு மருத்துவமனை சேவையை அத்தியாவசிய சேவையாக்குவது பயனற்றது. மருத்துவர்கள், ஊழியர்கள், பணிக்கு வரும் வாகனங்களுக்கு எரிபொருள் இல்லை என்றால். நீங்கள் எப்படி வேலைக்கு சமூகமளிப்பது?

களுபோவில வைத்தியசாலையில் உள்ள உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன. மற்ற மருத்துவமனைகளிலும் இதே நிலைதான்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல்தான் இந்த நாட்டை அதலபாதாளத்துக்கு இட்டுச்சென்றது

## சந்திரகாந்தன் எம். பி. சாடல்

மட்டக்களப்பு, மார்ச் 19

ஈஸ்டர் தாக்குதல்தான் இந்த நாட்டை அதலபாதாளத்துக்கு இட்டுச்சென் றது. சுமந்திரனும் சாணக்கியனும் கையெழுத்துப் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையி லேயே அரசாங்கம் பல் வேறு பணிகளை மேற் கொண்டுவருகிறது மட் டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திர காந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநக ரில் ஊரணி சந்திமுதல் திருப்பெருந்துறை வரையான நடை பாதை, மற்றும் பூங்கா என்பவை நேற்று திறந்து வைக் கப்பட்டன. இந்த நிகழ்வில் உரையாற் றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேலும், அரசியல் ரீதியான முரண் பாடுகள், கொள்கை பிரச்னைகள் இருந் தாலும் மக்கள் வாக்களித்தார்கள் என்ற அடிப்படையில் மக்களுக்கான தேவையை நிறைவேற்றுவதில் பின்னிற்கும் அவசி யம் கிடையாது. அந்த அடிப்படையில் நாங்கள் தொடர்ந்தும் மக்களுக்காக பணி யாற்றுவோம்.

இந்த அரசாங்கம் தோல்வியடைந்ததாக தெரிவிக் கப்படுகின்றபோதிலும் இந்த அரசாங்கம் தோல்வி யடையவில்லை, தோல்வியடையப்போவது மில்லை. பெரும்பான்மை பலத்துடன் இருக்கும் அரசாங்கம் இந்த பாராளுமன்ற காலம் முடியும் வரைக்கும் பயணிக்கும்.

நல்லாட்சிக் காலத்தில் அதிகளவான வாக்குகளை இந்த மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு அளித்தார் கள். இந்த ஆட் சிக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெயர்சொல்லக்கூடிய எந்த அபிவி ருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், குறைந்தளவு வாக்களித்த கோட்டாபய ராஜபக்ஷ பொதுவான வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத் துக்கு தேவையானவற்றை சமமாக வழங்கி வருகின்றார்.



நான் சிறையிலிருந்து வருகின்றபோது வாகரை, மட்டக்களப்பு மேற்கு வலயத் தில் முற்றுமுழுதாக இல்லாத நிலையே இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கல்வித்துறையில் மிக முக்கியமான வராகயிருந்தவரே கிழக்கு மாகாண கல்வி அமைச்சராகயிருந்தார். நான் சிறைச்சாலை யிலிருந்து வந்ததன் பின்னரே ஆசிரியர் களைக்கூட நியமித்தோம். இன்று 400 கிலோ மீற்றருக்கு அதிகமான வீதிகளை கிராம புறங்களில் அமைத்திருக் கின்றோம்.

அரசியலில் போட்டிகள், பொறாமைகள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அழிவுகளுக்கு நியாயம் கேட்க வேண்டியவர்களே அதனை மறந்து பக்கச்சார்பாக, அரசாங்கத்தின்மீது பழியை சுமத்த நினைப்பது வேதனையான விடயமாகும் - என்றார். (ஐ)

# வடக்கிலிருந்து பனங்கள் ஏற்றுமதி செய்ய முயற்சி!

## யாழ். வந்த அமைச்சர் பந்துல தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 19

பனங்கள்ளு வடக்கில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கைத் தொழில் வர்த்தகதுறை சம்பந்தமான கலந்துரையாட லின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

தற்போதைய சூழ்நிலையில் வர்த்தகத்துறை அமைச் சானது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ஒரு ஏற்றுமதியை செயற்ப டுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொண்டு அதனை செயல்படுத்த தயாராக உள்ளோம்.

அதன் ஒரு அங்கமாக பனங்கள்ளு உற்பத்தி கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டுக்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

குறிப்பாக நுவரெலியாவில் கோப்பி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே வடக்கில் இருந்து பனங்கள்ளை தயார் செய்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்-என்றார். (அ)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற பாடல் பெற்ற தலமான திருக் கோணேஸ்வரர் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற் றத்துடன் ஆரம்பமானபோது...!

# சுழிபுரத்தில் வாளுடன் வீடு புகுந்து கொள்ளை!

யாழ்ப்பாணம், மார்ச் 19

வட்டுக்கோட்டை-சுழிபுரம் பறாளை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு வாளுடன் புகுந்த இருவர் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகளை கொள்ளையடித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நள்ளிரவில் வாளுடன் வீட்டுக்குள் புகுந்த இருவர் வீட்டிலிருந்தவர்களை வாள் முனையில் அச்சுறுத்தி, ஒரு பவுண் சங்கிலி, அரைப்பவுண் தோடு, அரைப்பவுண் மோதிரம் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டிற்கமைய வட்டுக்கோட்டை பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)




# இந்திய மீனவர்கள் ஆறு பேர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஆறு பேருக்கு பத்தாண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட தலா ஒரு ஆண்டு சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்று விடுதலை செய்துள்ளது.

நாட்டுப் படகில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதே இந்திய மீனவர்கள் ஆறு பேரும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமை, கைதின் போதும் இடையறாது தொழிலில் ஈடுபட்டிருந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த தண்டனை அறிவிக்கப்படுவதாக நீதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை,

நாட்டுப்படகு என்பதால் படகை விடுவிப்பது குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதி நடைபெறும் என்றும் இதன்போது படகின் உரிமையாளர் மன்றில் முன்னிலையாகவேண்டும் என்றும் நீதிபதியால் அறிவுறுத்தப்பட்டது. (அ)

# எரிபொருள் நிலையத்தில் நேற்று காலை கொள்ளை!

## நாவல பகுதியில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 19

நாவல பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு நேற்றுக் காலை கூரிய ஆயுதங் களுடன் சென்ற 5 பேர், அங்கு எரிபொருள் நிரப்பும் ஊழியர்களை தாக்கி அவர்களிடம் இருந்த பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவுக் எரிபொருளை பெற்றுக்கொள்வது என்ற போர்வையில் சென்ற கொள்ளையர்கள், எரிபொருள் நிரப்பும் குழாய்களுக்கு அருகில் சென்று பின்னால் மறைத்து வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் ஊழியர்களை தாக்கி பணத்தைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொள்ளையடித்த பணத்தின் மதிப்பு இதுவரை கணக்கிடப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளை நடந்த விதம் அங்கிருந்த சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

கொள்ளையர்கள் குறித்து பல முக்கிய தடயங்கள் கிடைத்துள்ளதாகவும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK



11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் எண்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE - பாண்டவர் பூமி
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்



5.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை- தற்காலத்தில் கூட்டமைப்பின் ஜனாதிபதியை சந்திப்பது

**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்- தற்காலத்தில் தமிழர் பண்பாட்டை பேணிப் பாதுகாப்பவர்கள் ஆண்களா / பெண்களா?



10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஐ ரிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு